கிருஷ்ணர் சூரியனைப் போன்றவர், மாயை இருளைப் போன்றது. கிருஷ்ணர் இருக்கும் இடத்தில் மாயைக்கு இடமில்லை.

# பகவத் தரிசனம்





ஹரே கிருஷ்ண இயக்கத்தின் பத்திரிகை டிசம்பர் 2011 ₹ 15/-





தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர்

அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியர்

# பகவத் தரிசனம்

மலர் 1, இதழ் 5


டிசம்பர் 2011



4 உண்மையான மனிதன்

—ஸ்ரீல பிரபுபாதர்

மனிதனுக்கும் மிருகத்திற்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமை, மற்றும் உண்மையான மனிதனின் செயல்களை வழங்கும் உரை



9 சூடிக் கொடுத்த சுடர்க்கொடி

—கிருஷ்ண காமினி தேவி தாஸி

ஆண்டாளின் வரலாறும் மகிமையும்

யார் முட்டாள்? 12

சிந்திக்கத் தூண்டும் ஒரு சிறுகதை



பகவத் கீதையும் ஜாதியும் 17

—ஜெய கிருஷ்ண தாஸ், ஸ்ரீ கிரிதாரி தாஸ்

கீதை, ஜாதி வேற்றுமையைப் பரப்புகின்றது என்று நினைப்பவர்களுக்காக ஓர் ஆய்வு





22 எங்களை சோதித்துப் பாருங்கள்

—ஸ்ரீல பிரபுபாதர்

இலண்டன் விமான நிலையத்தில் ஸ்ரீல பிரபுபாதரைச் சூழ்ந்து கொண்டு நிருபர்கள் கேட்ட கேள்விகளும் அவரளித்த பதில்களும்



26 பகவத் கீதை உண்மையுருவில்

—ஸ்ரீ கிரிதாரி தாஸ்

பன்னிரண்டாம் அத்தியாயத்தின் ஒரு கண்ணோட்டம்

2 உங்களின் வரிகள்

15 வற்றிய நதியினைக் கடக்கலாம்

29 ஸ்ரீமத் பாகவதம்

**பகவத் தரிசனம்**

**ஹரே கிருஷ்ண இயக்கத்தின் பத்திரிகை**

ஸ்ரீ ஸ்ரீமத் பக்திசித்தாந்த சரஸ்வதி தாகூர் அவர்களின் கட்டளையின்படி தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர், Back to Godhead என்ற பெயரில் ஓர் ஆங்கில பத்திரிகையை தொடங்கினார், அஃது இன்று வரை அவரைப் பின்பற்றுபவர்களால் நடத்தப்பட்டு வருகிறது. அப்பத்திரிகைக்கு அவரளித்த வழிகாட்டுதலைப் பின்பற்றி தமிழில் வெளிவருவதே பகவத் தரிசனம்.

**தொகுப்பாசிரியர்:** ஸ்ரீ கிரிதாரி தாஸ் (C.செந்தில் குமார்)

**பிழைத் திருத்தம்:** அமுதவல்லி தேவி தாஸி, ஆனந்த கிருஷ்ண தாஸ், இராம கிங்கர தாஸ், ராதா மதுராபதி தாஸ், கேசவ பலராம தாஸ், சனக குமார தாஸ், சுகோபி தேவி தாஸி, மதுமதி பிரியா தேவி தாஸி, ராஜ சேகர், ஜெய கிருஷ்ண தாஸ்

**பதிப்பாசிரியர்:** யுதிஷ்டிர தாஸ் (உஜ்வல் ஜாஜோ)

**வடிவமைப்பு:** ஸ்ரீ கிரிதாரி தாஸ்

**அட்டைப்பட வடிவமைப்பு:** ஸ்ரீ கேசவ தாஸ்

**அலுவலக உதவி:** சாது சைதன்ய தாஸ், வேங்கடேஷ்

**தட்டச்சு உதவி:** விசித்ரா

**பதிப்பகத்தார் அலுவலகம்:** பேக் டு காட்ஹெட், 33, ஜானகி குடிர், ஜுஹு சர்ச் எதிரில், ஜுஹு, மும்பை - 400049.

**சந்தா அலுவலகம்:** இஸ்கான், 7C, வாசன் தெரு, பெரம்பூர், சென்னை - 600 011. தொலைபேசி: (044) 25514553, 98948 14553

**மின்னஞ்சல்:** btgtamil@pamho.net, tamilbtg@gmail.com

**அச்சிட்டோர்:** சாரதி பிரிண்டர்ஸ், 6/63, LIG, தொண்டைமான் தெரு, NH-1, மறைமலைநகர், தமிழ்நாடு - 603209.


**பதிப்புரிமை** © 2011, பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை. அனைத்து உரிமைகளும் பதிப்பகத்தாருக்கு மட்டுமே. (பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளையின் அறங்காவலர்: ஜெயாத்வைத ஸ்வாமி)


பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை





## ஆத்ம ஞான விழிப்புணர்வு

தத்துவம் உயர்ந்தது, அதைவிட உயர்ந்தது அதை நடைமுறைப் படுத்துதல். ஸ்ரீமத் பகவத் கீதையில் கூறப்பட்ட ஆத்ம ஞானத்தை தங்களது வாழ்க்கையில் நடைமுறைப்படுத்திய பக்தர்களின் (சித்ரகேது) வரலாற்றினை ஸ்ரீமத் பாகவதத்திலிருந்து பிரசுரித் தீர்கள். இத்தகு வரலாறுகள் நவீன கால மக்களிடையே ஆத்ம ஞான விழிப்புணர்வை ஏற்படுத்துவது உறுதி. ஆகையால், தயவுகூர்ந்து இதுபோன்ற அனைத்து வரலாறுகளையும் வெளியிடக் கோரி வேண்டுகிறேன்.

—ரத்ன பஹு கௌர தாஸ், மதுரை

## கனமான உண்மை

"உண்ணாவிரதம், உண்மையும் போலியும்" கட்டுரையில் உண்ணா விரதத்தின் தாத்பரியங்கள் சிந்திக்கத் தூண்டும் வகையில் எழுதப்பட்டிருந்தன. தற்பெருமைக்காகவும் பிறரைத் துன்புறுத்துவதற்காகவும் அழிப்பதற் காகவும் உண்ணாவிரதம் மேற்கொள் கின்ற முட்டாள்தனங்களைக் கண்டித் திருப்பது வரவேற்கத்தக்கது. தற்போ தைய உண்ணாவிரதங்கள் ரஜோ குணத்தையும் தமோ குணத்தையும் கொண்ட போலித்தனமான உண்ணா விரதங்களே என்ற கனமான உண்மையை ஸ்ரீ கேசவ தாஸ் அவர்கள், ஆழமாக உணர்த்தியுள்ளார். பாராட்டுக்கள்.

—த.சத்தியநாராயணன், அயன்புரம்

## அற்புதமான இதழ்கள்

உங்களின் பகவத் தரிசனம் புத்தகம் படிப்பதால், உள்ளிருக்கும் நாராயணன் நேரில் நம்முடன் பேசி நன்மைகளைச் சொல்லி, அனைவரையும் நேரே வைகுண்டம் அழைத்துச் செல்வதுபோல தோன்றுகின்றது. ஒவ்வொரு சொல்லையும் படிக்கப் படிக்க ஆனந்தம், கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகுகின்றது. துவாரகாதீசனை எங்களுக்குக் காட்டியதற்கு தங்களுக்கு கோடி கோடி நமஸ்காரம். வாமன அவதாரம், ராதா தாமோதரர் கோவில் என்று கட்டுரைகளை வழங்குவதற்கு மிக்க நன்றி. எனக்கு வயது 85. பூலோக வைகுண்டமான ஸ்ரீ ரங்கக்ஷேத்திரத்தில் வசித்து வருகிறேன். அக்டோபர் மாத இதழைக் கண்டேன். இதைப் படித்துக்கூட அவர்கள் திருந்தவில்லையெனில், ஸ்வாமி எழுதியதுபோல அவர்கள், கழுதை மற்றும் பன்றியாகத்தான் இருப்பார்கள். என்னால் முடிந்த விஷயங்களை என்னிடம் வருவோருக்கு எடுத்துச் சொல்லி வருகிறேன். போலி சாமியார்களைப் பற்றிய கட்டுரை, பகவத் கீதை தொடர் விளக்கங்கள் என பலவும் நினைவில் நிற்கக் கூடியவை.

—செண்பகம் அம்மங்கார், ஸ்ரீரங்கம்

(குறிப்பு: மேலுள்ள கருத்து நீண்ட கடிதத்தின் ஒரு சுருக்கம்)

## சலவைத் தொழிலாளியை கிருஷ்ணர் கொன்றது ஏன்?

கிருஷ்ணர் மதுராவினுள் நுழைந்த போது, அங்கிருந்த ஒரு சலவைத் தொழிலாளியிடம் சில உடைகளைக் கேட்டார். அத்துணிகள் மன்னர் கம்சனுடையவை என்று கூறிய தொழிலாளி, துணிகளைக் கொடுக்க மறுத்தான். உடனடியாக கிருஷ்ணர் அவனைக் கொன்றுவிட்டார். எனது கேள்வி என்னவெனில், சலவைத் தொழிலாளி தனது கடமையை

முறையாகச் செய்தான். கிருஷ்ணர் ஏன் அவனைக் கொல்ல வேண்டும்?

—வரதராஜன், நாமக்கல்

## எமது பதில்

அவன் ஒரு சாதாரண சலவைத் தொழிலாளி போலவும் தனது கடமையை முறையாகச் செய்தது போலவும் தோன்றலாம். ஆனால் உண்மையில், அவன் ஓர் அசுரன். அசுரர்களைக் கொல்ல அவதரித்த ஸ்ரீ கிருஷ்ணர், மதுராவினுள் நுழைந்தவுடன் கம்சனின் கூட்டாளிகளில் ஒருவனான சலவைத் தொழிலாளியின் தலையினை எந்தவொரு ஆயுதமும் இல்லாமல், தனது வெறுங்கையைக் கொண்டு துண்டித்து, கம்சனுக்கு ஓர் எச்சரிக்கையை விடுத்தார். கிருஷ்ணருக்கு உடைகளைத் தர மறுத்தது மட்டுமின்றி, அவருக்கு அறிவுரையும் வழங்கினான் அந்த சலவைத் தொழிலாளி. கிருஷ்ணரை சாதாரண மனிதனாக நினைத்த அவனுக்கு கிருஷ்ணர் தக்க பாடத்தைப் புகட்டினார்.

கம்சனுடன் கொண்ட தொடர் சகவாசத்தினால், அவன் கம்சனின் அசுர குணங்களைப் பெற்றிருந்தான். எல்லாரின் இதயத்திலும் வீற்றுள்ள கிருஷ்ணர் அதனை நன்கறிவார். அவனிடம் நீண்ட நேரம் பேசிய பின்னர், அவனை அசுரன் என்று முடிவு செய்ய வேண்டிய அவசியம் அவருக்கு இல்லை. கிருஷ்ணர் மதுராவினுள் நுழைவதற்கு முன்பே, யார் யாரைக் கொல்ல வேண்டும் என்பதை முடிவு செய்துவிட்டே நுழைந்தார். அவரது தெய்வீக லீலைகளில் எந்தவொரு பிழையும் இருக்க முடியாது.

ஓர் அமைச்சரின் பணியாள் தனது எஜமானருக்கு விசுவாசமாக இருத்தல் நல்லதே. ஆனால் நாட்டின் பிரதமரே வந்து அவனிடம் ஏதாவது ஒன்று கேட்டால், அதனைக் கொடுக்க மறுப்பது மாபெரும் குற்றம்; அதிலும் பிரதமருக்கே அறிவுரை வழங்கினால், அஃது அதைவிட மிகப்பெரிய குற்றம். இதைத்தான் இந்த சலவைத் தொழிலாளி செய்தான்.



சலவைத் தொழிலாளியின் தலையைக் கொய்த பின்னர், அங்கிருந்த உடைகளை கிருஷ்ணர் அணிந்துகொள்ளுதல்

உண்மையில், ஓர் அமைச்சருக்கும் பிரதமருக்கும் இருக்கும் வேறுபாட்டைக் காட்டிலும், கம்சனுக்கும் கிருஷ்ணருக்கும் இருக்கும் வேறுபாடு அளவிட முடியாததாகும். கிருஷ்ணரின் ஆணையை நிறைவேற்றுவதே உண்மையான கடமை; அவரே எல்லா உலகங்களுக்கும் மன்னர்.

மேலும், கிருஷ்ணர் செய்யும் எல்லா செயல்களும் அனைவருக்கும் நன்மை பயக்கக்கூடியவை; கிருஷ்ணரின் திருக்கரங்களால் தீண்டப்பட்ட சலவைத் தொழிலாளிக்குக் கிடைத்த பாக்கியம் எத்தனை நபர்களுக்குக் கிட்டியுள்ளது!

ஸ்ரீல பிரபுபாதர் அருளிய "கிருஷ்ணர், புருஷோத்தமரான முழுமுதற் கடவுள்" என்னும் புத்தகத்திலிருந்து சில வரிகள்:

"கிருஷ்ணரும் பலராமரும் மதுராவினுள் சென்று கொண்டிருந்தபோது ஒரு சலவைத் தொழிலாளியைக் கண்டனர். சில நல்ல துணிகள் வேண்டுமென்று கிருஷ்ணர் அவனிடம் கேட்டார். நேர்த்தியாகச் சாயமேற்றப்பட்ட துணிகளைக் கொடுத்தால் எல்லா நலன்களும் பெருகுமென்று கிருஷ்ணர் அவனிடம் கூறினார். கிருஷ்ணர் ஒரு பிச்சைக்காரர் அல்ல, துணி அவருக்குத் தேவைப்படவும் இல்லை. இருப்பினும் அவர் கேட்பதைத் தருவதற்கு எல்லாரும் தயாராகவிருக்க வேண்டுமென்பதை வலியுறுத்துவதற்காக அவ்வாறு கேட்டார்.

"ஆனால் அந்த சலவையாள் கம்சனின் வேலையாள் என்பதால், முழுமுதற் கடவுளான கிருஷ்ணரின் வேண்டுகோளை புரிந்துகொள்ளவில்லை. இது சகவாச தோஷத்தால் ஏற்படுவதாகும். அவனுக்கு எல்லா நலன்களையும் தருவதாக வாக்களித்த முழுமுதற் கடவுளுக்கு அவன் உடனடியாகத் துணிகளைத் தந்திருக்க வேண்டும். அவன் மகிழ்ச்சியடைவதற்குப் பதிலாக கோபம் கொண்டு, "அரசருக்குரிய ஆடையை நீ எப்படிக் கேட்கலாம்?" என்று கேட்டான். பின்னர், கிருஷ்ணருக்கும் பலராமருக்கும் ஆலோசனை கூறினான்: "சிறுவர்களே, இனி இவ்வாறு அரசருக்குரிய ஆடையைக் கேட்கும் அகம்பாவச் செயலைச் செய்யாதீர்கள். அப்படிச் செய்தால் அரசரின் ஆட்கள் உங்களைத் தண்டிப்பார்கள். மிகவும் துன்பப்பட நேரிடும். அரசரின் உடைமையைச் சட்டத்திற்குப் புறம்பாகப் பயன்படுத்த விரும்புபவர்கள் கடும் தண்டனைக்கு ஆளாவார்கள்."

"இதைக்கேட்டதும் தேவகி நந்தனான கிருஷ்ணர் சலவையாளியிடம் மிகுந்த கோபம் கொண்டு அவனைத் தம் கையால் ஓங்கி அடித்து, அவனது தலையைத் தனியாகத் துண்டித்தார். சலவையாள் பூமியில் இறந்து வீழ்ந்தான். வாளின் உதவியின்றி கையினாலேயே சலவையாளின் தலையைத் துண்டித்ததன் மூலம், தனது ஒவ்வொரு அங்கமும் தனது விருப்பம்போல் செயல்படக்கூடியவை என்பதை கிருஷ்ணர் நிரூபிக்கின்றார்."


## கேள்விகளும் கருத்துகளும்

**பகவத் தரிசனம் குறித்த தங்களது கேள்விகளையும் கருத்துகளையும் சந்தா அலுவலகத்தில் தெரிவிக்கவும்.**

# உண்மையான மனிதன்

அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சார்யரான தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதரால் ஆப்பிரிக்காவில் உள்ள நைரோபி நகரில், 1975 செப்டம்பர் 29ஆம் நாளன்று வழங்கப்பட்ட உரை.

மனுஷ்யாணாம் ஸஹஸ்ரேஷு
கஷ்சித் யததி ஸித்தயே
யததாம் அபி ஸித்தானாம்
கஷ்சின் மாம் வேத்தி தத்த்வத:

"ஆயிரமாயிரம் மனிதர்களில் யாரேனும் ஒருவன் பக்குவமடைய முயற்சி செய்யலாம். அவ்வாறு பக்குவ மடைந்தவர்களில்கூட யாரேனும் ஒருவனே என்னை உண்மையாக அறிகிறான்." (பகவத் கீதை 7.3)

## மிருகத்திற்கு சமமான மனிதன்

கிருஷ்ணரைப் புரிந்துகொள்வது அவ்வளவு சுலபமல்ல. மனுஷ்யாணாம் ஸஹஸ்ரேஷு, பல்லாயிரம் மனிதர் களில் யாரேனும் ஒருவனே பக்குவ மடைய முயற்சி செய்யலாம் என்று கிருஷ்ணர் கூறுகிறார். யாரால் பக்குவ மடைய முடியும்—அதுவும் இந்த கலி யுகத்தில்? மக்கள் அனைவரும் நாய் களையும் பூனைகளையும் போன்று உண்ணுதல், உறங்குதல், பாலுறவு கொள்ளுதல், தற்காத்துக் கொள்ளுதல் ஆகியவற்றிற்காகவே நாள் முழுவதும் உழைக்கிறார்கள். மனிதர்கள் மனிதர் களைப் போல வாழ்வதில்லை.

ஆஹார-நித்ரா-பய-மைதுனம் ச
ஸாமான்யம் ஏதத் பஷுபிர் நராணாம்
தர்மோ ஹி தேஷாம் அதிகோ விஷேஷோ
தர்மேண ஹீனா: பஷுபி: ஸமானா:

"உண்ணுதல், உறங்குதல், பாலுறவு, தற்காப்பு ஆகிய செயல்கள் விலங்குகள், மனிதர்கள் என இருவருக்கும் பொதுவானவை. ஆனால் ஆன்மீக வாழ்வில் ஈடுபடுவதற் கான அரிய வாய்ப்பு மனிதர்களுக்கு மட்டுமே உண்டு. எனவே, ஆன்மீக வாழ்க்கை இல்லை என்றால், மனிதன் விலங்குகளுக்கு சமமானவன்," என்று ஹிதோபதேஷம் கூறுகிறது.

உண்ணுதல் என்பதைப் பொறுத்த வரை நாய்க்கும் எனக்கும் என்ன வேறுபாடு? நான் என்னுடைய சுவைக்கு ஏற்றாற்போல உண்கிறேன், நாய் அதனுடைய சுவைக்கு ஏற்றாற்போல உண்கின்றது. நான் விதவிதமான சுவையான உணவுகளை மேஜைமீது தட்டில் வைத்து நாற்காலியில் அமர்ந்து சாப்பிட்டால்கூட, உண்ணுதல் என்னும் செயல் மாறப் போவதில்லை. உணவிலும் உண்ணும் முறையிலும் வேற்றுமை உள்ளபோதிலும் உண்ணுதல் என்னும் செயலானது எனக்கும் நாய்க்கும் பொது வானதாக இருப்பதால், மேஜையில் வைத்து உண்பதால் மட்டும் மக்கள் நாகரிகமானவர்களாக மாறி விட முடியாது என்று சாஸ்திரம் கூறுகின்றது. எந்தவொரு கவலையுமின்றி நாயினால் தெருக்களில் உறங்க முடியும், ஆனால் சொகுசான படுக்கையறை இல்லாமல் நம்மால் உறங்க முடியாது—இருப்பினும், உறங்குதல் என்னும் செயல் பொதுவானதே. காமத் தைப் பொறுத்தவரை எந்த வெட்கமும் இன்றி நாய் தெருவில் அனுபவிக்கும், ஆனால் மனிதர்களுக்கு சில கட்டுப்பாடுகள் உண்டு—இருப்பினும், காமம் என்பதும் பொதுவானதே. அதுபோல, தற்காத்துக் கொள்ளுதல் என்பதும் நாயிடம் உள்ளது. நம்மைப் பாதுகாக்க நாம் அணுகுண்டைத் தயாரித்துவிட்ட காரணத்தினால், நாம் நாயைக் காட்டிலும் எவ்விதத்திலும் சிறந்தவர்களாகிவிட முடியாது.



## மனித வாழ்வின் சிறப்பு

அப்படியெனில், மனித வாழ்வின் சிறப்பு என்ன? அதாதோ ப்ரஹ்ம ஜிஜ்ஞாஸ, மனிதன் பரம்பொருளைப் பற்றி

அறிவதில் ஆர்வம் கொள்ள வேண்டும், வாழ்வின் முக்கியத்துவத்தை உணர வேண்டும். நாயினால் அதனை உணர முடியாது. இதுவே மனிதனுக்கும் நாய்க்கும் உள்ள வேறுபாடு. மனித வாழ்வில் பிரம்மனையும் பரபிரம்மனையும் பற்றி, அதாவது ஆத்மாவையும் பரமாத்மாவையும் பற்றி ஆவலுடன் வினவ வேண்டும். பரம்பொருளைப் பற்றிய ஞானத்தை அடைவதே வாழ்வின் பக்குவநிலை. அதை விட்டுவிட்டு உண்ணுதல், உறங்குதல், பாலுறவு, தற்காத்தல் என்று நாயிடம் போட்டியிடுவது நாகரிகமல்ல, வாழ்வின் பக்குவநிலையுமல்ல. நாய் அல்லது பூனையைப் போன்ற மிருக புத்தியுள்ள மனிதர்களால் வாழ்வின் குறிக்கோளை உணர முடியாது.

## குருடர்களால் வழிநடத்தப்படும் சமுதாயம்

*ந தே விது: ஸ்வார்த-கதிம் ஹி விஷ்ணும்*
*துராஷயா யே பஹிர்-அர்த-மானின:*
*அந்தா யதாந்தைர் உபனீயமானாஸ்*
*தே ’பீஷ-தந்த்ருயாம் உரு-தாம்னி பத்தா:*

“புலனின்பத்தில் பற்றுதல் கொண்டுள்ள குருடனைத் தங்களது தலைவனாக அல்லது குருவாக ஏற்றுக் கொண்டுள்ளவர்களும் பௌதிக வாழ்வை அனுபவிக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருப்பவர்களும், ஆன்மீக உலகிற்குத் திரும்பிச் சென்று பகவான் விஷ்ணுவின் சேவையில் ஈடுபடுவதே வாழ்வின் குறிக்கோள் என்பதைப் புரிந்துகொள்ள இயலாது. குருடனால் வழிகாட்டப்படும் மற்ற குருடர்கள் சரியான பாதையை விட்டு விலகிச் சென்று சாக்கடையில் விழுவதுபோல், பௌதிகப் பற்றுடைய நபரால் வழிகாட்டப்படும் பௌதிகப் பற்றுடைய இதர நபர்கள் பலன்நோக்குச் செயல்களின் பலமான கயிறுகளால் பிணைக்கப்படுகின்றனர். இதனால் அவர்கள் மூவகைத் துன்பங்களை அனுபவித்துக் கொண்டு பௌதிக வாழ்வைத் தொடர்கின்றனர். (ஸ்ரீமத் பாகவதம் 7.5.31)

முழுமுதற் கடவுளான விஷ்ணுவைப் புரிந்துகொள்வதே வாழ்வின் இலட்சியம். ஆனால் மக்களோ அவரின் வெளிப்புற சக்தியான ஜட சக்தியில் இன்பமடைய முயற்சி செய்கிறார்கள். அரசியல் வாதிகள், தலைவர்கள், தத்துவ வாதிகள், விஞ்ஞானிகள் என்று கூறிக் கொள்பவர்களால் இச்சமுதாயம் வழி நடத்தப்படுகிறது—ஆனால், வாழ்வின் குறிக்கோளை அறியாமல், இவர்கள் அனைவரும் குருடர்களாக உள்ளனர்.

## அறியாமையிலிருந்து வெளிவர வேண்டும்

*உரு தாம்னி பத்தா.* உரு என்றால் “மிகவும் வலிமையுடைய” என்றும், *தாம்னி* என்றால் “கயிறு” என்றும் பொருள்படும். மிகவும் வலிமையான கயிறுகளால் கட்டப்படும்போது, அதன் முடிச்சுகளை அவிழ்ப்பதற்கு மிகவும் சிரமப்படுகிறோம். அதுபோலவே நாம் தற்போது இயற்கையின் சட்டங்களால் மிகவும் பலமாக கட்டப்பட்டுள்ளோம். இச்சூழ்நிலையில்கூட, “நான் சுதந்திர மானவன், கட்டுப்பாடற்றவன், என் விருப்பம் போல் எதை வேண்டுமானாலும் செய்வேன்,” என்று மக்கள் நினைக்கின்றனர்—இஃது அவர்களின் பக்குவமின்மையைக் காட்டுகிறது, அறியாமை என்ற இருளில் இருப்பதைக் காட்டுகிறது.

*தமஸி மா ஜ்யோதிர் கம:,* “இருளில் இருக்காதே, வெளிச்சத்திற்கு செல்,” என்று ஒரு வேத வாக்கியம் கூறுகிறது. நான் ஓர் உடல் என்றும் உடலின் தேவைகளை நிறைவேற்றுவதே வாழ்வின் பக்குவநிலை என்றும் ஒருவன் நினைத்தால், அதுவே இருள் எனப்படும். உடல் தேவைகளுக்காகவே ஒவ்வொருவரும் போட்டி போட்டுக் கொண்டு முயற்சிக்கிறார்கள். அடுக்குமாடி வீடும் மூன்று ரோல்ஸ்ராய்ஸ் கார்களும் வைத்திருந்தால் வாழ்வின் பக்குவநிலையை அடைந்துவிட்டதாகக் கருதுகிறார்கள். ஆனால், “அடுக்குமாடி கட்டிடம் எத்தனை நாள்கள் என்னிடம் நிலைத்திருக்கும்? இதுவா எனது முக்கியக் கடமை?”—இச்சிந்தனை அவர்களிடம் இல்லை. அடுக்குமாடிக் கட்டிடத்தில் மனிதர்கள் மட்டுமின்றி, நாய்கள், பூனைகள், புழுக்கள், எலிகள் என இதர உயிரினங்களும் வாழ்கின்றன. அவ்வாறு இருக்கையில் மனிதனுக்கும் இதர உயிர்வாழிகளுக்கும் என்ன வித்தியாசம்? மனிதனால் வாழ்வின் பக்குவநிலையை அடைய முடியும்—இதுவே வித்தியாசம். நான் யார், நான் இந்த உடலா போன்ற கேள்விகளை எழுப்ப முடியும்—இதுவே வித்தியாசம்.

## நேரத்தை வீணடிக்கும் செயல்கள்

கிருஷ்ணரைப் புரிந்துகொள்வதே வாழ்வின் மிக உன்னத குறிக்கோள். *மாம் வேத்தி தத்த்வத:.* மேலும், அவரை மேலோட்டமாக அல்லாமல் உண்மையாகப் புரிந்துகொள்ளுதல் அவசியமாகிறது. *வேதைஸ் ச ஸர்வைர் அஹம் ஏவ வேத்யோ:* (பகவத் கீதை 15.15). ஒருவன் வேத இலக்கியங்கள் அனைத்தையும் கற்ற பண்டிதனாக இருந்தாலும் அவன் கிருஷ்ணரைப் பற்றி அறிந்திருத்தல் அவசியம். அவன் கற்ற வேதங்கள் கிருஷ்ணரைப் புரிந்துகொள்ள உதவவில்லை என்றால், அவை பயனற்றவை—அத்தகு கல்வி நேரத்தை வீணடிப்பதற்கு சமமானது.

*தர்ம: ஸ்வனுஷ்டித: பும்ஸாம்*
*விஷ்வக்ஸேன- கதாஸு ய:*
*நோத்பாதயேத் யதி ரதிம்*
*ஷ்ரம ஏவ ஹி கேவலம்*

**குருடனால் வழிகாட்டப்படும் மற்ற குருடர்கள் சரியான பாதையை விட்டு விலகிச் சென்று சாக்கடையில் விழுவதுபோல், பௌதிகப் பற்றுடைய நபரால் வழிகாட்டப்படும் பௌதிகப் பற்றுடைய இதர நபர்கள் பலன்நோக்குச் செயல்களின் பலமான கயிறுகளால் பிணைக்கப்படுகின்றனர்.**

“ஒவ்வொருவரும் தத்தமது நிலைக்கு ஏற்றவாறு செய்யும் கடமைகள், பரம புருஷ பகவானைப் பற்றிய செய்திகளின் மீதான பற்றுதலைத் தூண்டவில்லையெனில், அவையனைத்தும் பயனற்ற உழைப்பே.” (ஸ்ரீமத் பாகவதம் 1.2.8)

ஒருவன் தனது கடமைகளை நேர்மையாகவும் திறமையாகவும் நிறைவேற்றினால்கூட, அக்கடமைகள் அவனுள் இருக்கும் கிருஷ்ண உணர்வை விழிப்புற செய்யாவிட்டால், *ஷ்ரம ஏவ ஹி கேவலம்*, நேரத்தை வீணடிப்பவையே. பொதுவாக, கிருஷ்ணரைப் புரிந்துகொள்வதே வாழ்வின் மிகவுயர்ந்த பக்குவநிலை என்பதில் யாரும் ஆர்வம் காட்டுவதில்லை, பல்லாயிரம் மனிதர்களில் யாரேனும் ஒருவன் ஆர்வம் காட்டலாம் என்று கிருஷ்ணர் கூறுகிறார். மற்றவர்கள் அனைவரும் இருளில்தான் உள்ளனர். ஒவ்வொருவரும் ஜட இயற்கையை அடக்கி, அமைச்சர், ஜமீன்தார், தொழிலதிபர் என வளர விரும்புகின்றனர். அவற்றில் தோல்வியடையும்போது கடவுளாக விரும்புகின்றனர். ஆனால் இவையெதுவும் பக்குவமானவை அல்ல; தன்னுணர்வு அல்ல.

## உண்மையான தன்னுணர்வு

ஜட இயற்கையை அடக்கியாள பல்வேறு வழிகளில் முயற்சி செய்தாலும், மீண்டும் மீண்டும் நாம் தோற்கடிக்கப்படுவது ஏன்? ஒருவன் கடுமையாக உழைத்து ஒரு மாநிலத்தின் தலைவனானால், அதன் பின்னர் அவன் இறக்க விரும்புவதில்லை. இருப்பினும் ஒரு காலக்கட்டத்தில், மரணம் என்ற காலன், அவனுடைய அரசியல், பதவி, சொத்து, குடும்பம் என அனைத்தையும் பறித்துக் கொள்ளும். *ம்ருத்யு: ஸர்வ ஹரஷ் சாஹம்*, என்கிறது பகவத் கீதை (10.34). யார் பறித்துக் கொள்வார்? மரண ரூபத்தில் வரும் கிருஷ்ணர் அனைத்தையும் பறித்துக் கொள்வார்.

நாம் எவ்வளவு சொத்துக்களைச் சேகரித்தாலும், ஒரு காலக்கட்டத்தில் கிருஷ்ணர் அவையனைத்தையும் பறித்துக் கொள்வார். இதை உணர்ந்து, கிருஷ்ணரிடம் சரணடைந்தால், நாம் எதையும் இழக்க மாட்டோம். “நான் சுதந்திரமானவன் அல்ல, சுதந்திரமாக இருக்க முயற்சித்தல் முடியாத காரியம். நான் கட்டுப்பட்டவன், கிருஷ்ணரின் நித்திய சேவகன்”—இதை உணர்வதே உண்மையான தன்னுணர்வாகும். *ஜீவேர ஸ்வரூப ஹய கிருஷ்ணேர நித்ய-தாஸ்* (சைதன்ய சரிதாம்ருதம், மத்திய லீலை 20.108). கிருஷ்ணரின் நித்தியமான சேவகனாக இருப்பதே ஜீவனின் ஸ்வரூப (உண்மையான) நிலை என்று சைதன்ய மஹாபிரபு உபதேசித்துள்ளார். பிரம்மன் உணர்வு, *அஹம் ப்ரஹ்மாஸ்மி*, என்பது உடல் சார்ந்த வாழ்க்கையிலிருந்து விடுதலை பெறுவதைக் குறிக்கும். “நான் இந்த ஜடவுடல் அல்ல, ஆன்மீக ஆத்மா,” என்பதை உணர்தல் தன்னுணர்வின் முதற்படியாகும். “நான் கிருஷ்ணரின் நிரந்தர சேவகன்,” என்பதை உணர்வதே தன்னுணர்வின் இறுதி நிலையாகும். இந்த இறுதியான ஸ்வரூப நிலையை ஜீவாத்மா அடையும்போதுதான் ஞானம் முதிர்ச்சியடைந்ததாகக் கருதப்படுகிறது, அரைகுறை ஞானத்துடன் பக்குவமடைய முடியாது.

எனவே, உண்மையான தன்னுணர்வைப் பெற்றவன் பூரண அறிவுடன் வாசுதேவரான கிருஷ்ணரே அனைத்திற்கும் காரணம் (பகவத் கீதை 7.19) என்பதைப் புரிந்துகொள்கிறான். “அவருடைய அம்சமாகிய நான் அவரது நிரந்தர சேவகன்,” என்பதை உணர்ந்தவன் மஹாத்மா எனப்படுகிறான். அத்தகைய மஹாத்மா மிகவும் அரிதானவன், ஸ மஹாத்மா ஸு துர்லப:.

## கிருஷ்ணருக்குத் தொண்டு செய்தல்

உடலின் ஓர் அம்சமான விரலின் பணி முழு உடலுக்கு சேவை செய்வதே. விரலை அசைக்க வேண்டும் என்று நான் விரும்பினால் அஃது உடனே அசைய வேண்டும்—அப்போது அவ்விரல் ஆரோக்கியமான (இயல்பான) நிலையில் இருப்பதாகக் கொள்ளலாம். மேலும், உடலின் மற்றோர் அம்சமான கால், நான் ஒரு குறிப்பிட்ட இடத்திற்குச் செல்ல வேண்டும் என்று விரும்பினால், உடனே இயங்க வேண்டும். அது காலின் இயல்பான நிலை. ஆனால் நான் நடப்பதற்கு எனக்கு ஒரு குச்சியின் உதவி தேவைப்பட்டால், என்னுடைய கால் நோயினால் பீடிக்கப்பட்டுள்ளது என்பதை உணரலாம். அதுபோலவே நாம் கிருஷ்ணரின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்காவிடில், நம்மிடம் தெளிவான புத்தி இல்லை என்றும், நாம் அறியாமையில் உள்ளோம் என்றும், நாம் நம்முடைய இயல்பான நிலையில் இல்லை என்றும் உணர வேண்டும்.

கிருஷ்ணருக்குத் தொண்டு செய்வதே நமது கடமை. கிருஷ்ணர் நம்முடைய உதவியை எதிர்பார்த்து இருப்பதில்லை, இருப்பினும் தன்னிடம் சரணடையும்படி அவர் ஏன் கட்டளையிடுகிறார்? அது



*கிருஷ்ணருக்குத் தொண்டு செய்வதே நமது உண்மையான நிலை.*

நமது நன்மைக்காகவே. "நான் எதற்காக கிருஷ்ணரிடம் சரணடைய வேண்டும்?" என்று மூடத்தனமாக நினைத்தல் பக்குவமின்மையைக் காட்டுகிறது.

## தொண்டு செய்ய மறுப்பவர்கள்

கிருஷ்ணரின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து அவரிடம் சரணடைவதே வாழ்வின் பக்குவநிலை. ஆனால் பெரும்பாலான மக்கள் அவ்வாறு சரணடைவதில்லை. ஏன்?

ந மாம் துஷ்க்ருதினோ மூடா:
ப்ரபத்யந்தே நராதமா:
மாயயாபஹ்ருத-ஜ்ஞான
ஆஸுரம் பாவம் ஆஷ்ரிதா:

"சற்றும் அறிவற்ற மூடர்களும், மனிதரில் கடைநிலையோரும், மாயையால் அறிவு கவரப்பட்டவர்களும், அசுரரின் நாத்திகத் தன்மையை ஏற்றவரும் என்னிடம் சரணடைவதில்லை." (பகவத் கீதை 7.15)

துஷ்க்ருதினோ, அவர்கள் பாவச் செயல்களில் ஈடுபடுவதால் கிருஷ்ணரிடம் சரணடைவதில்லை. அவர்கள் தங்களது சொந்த நலனைப் பற்றி அறியாத மூடர்களாகவும் (மூடா), மனிதரில் கடைநிலைப்பட்டவர்களாகவும் (நராதமா) உள்ளனர். கிருஷ்ணரைப் புரிந்துகொள்ளவும் கிருஷ்ணரிடம் சரணடையவும்தான் இவ்வுடல் கொடுக்கப்பட்டுள்ளது—அவர்கள் அவ்வாறு செய்யாததால், கிருஷ்ணர் அவர்களை, நராதமா, மனிதரில் கடைநிலையோர் என்று அழைக்கிறார்.

சிலர் இதனை மறுத்து தம்மை சிறந்த கல்விமானாக நினைக்கலாம். ஆனால் அஃது ஏற்கத்தக்கதல்ல; ஒருவன் கிருஷ்ணரைப் புரிந்துகொள்ளவில்லையெனில், அவன் பெற்ற கல்விக்கு அர்த்தமே இல்லை. மாயயா பஹ்ருத-ஜ்ஞான, அவனுடைய அறிவு மாயையால் கவரப்பட்டுள்ளதால், அவன் கிருஷ்ணரை எதிர்க்கின்றான், கடவுளை மறுக்கின்றான், தன்னையே கடவுளாக நினைக்கின்றான். இந்த ஜடவுலகிலுள்ள அனைவரும், குறிப்பாக கலி யுகத்தில் வசிப்பவர்கள் தம்மையே கடவுளாக நினைத்துக் கொண்டுள்ளனர். அவர்கள் அனைவரும் முதல் தர முட்டாள்கள் என்று பாகவதம் (1.1.10) கூறுகின்றது.

ப்ராயேணால்பாயுஷ: ஸப்ய
கலாவஸ்மின் யுகே ஜனா:
மந்தா: ஸுமந்த-மதயோ
மந்த-பாக்யா ஹ்யுபத்ருதா:

"இரும்பு யுகமான கலி யுகத்தில் பெரும்பாலான மக்கள், அற்ப ஆயுள் கொண்டவர்களாகவும், சண்டை பிரியர்களாகவும், மந்த புத்தி படைத்தவர்களாகவும், அதிர்ஷ்டமற்றவர்களாகவும் இருப்பதோடு மட்டுமின்றி, எப்போதும் அமைதியற்றவர்களாகவும் இருப்பர்."



கலி யுகம் மிகவும் மோசமானதாக உள்ளபோதிலும், இதில் ஒரு நற்குணம் உண்டு—பகவானின் திருநாம சங்கீர்த்தனத்தினால் யார் வேண்டுமானாலும் உயர்ந்த பக்குவநிலையை அடைய முடியும்.

## கலி யுகத்தின் தீமைகள்

கலி என்றால் "சண்டை" என்று பொருள். மக்கள் எப்போதும் சண்டையிட்டுக் கொண்டு அறியாமையில் இருப்பதால், இது கலி யுகம் எனப்படுகிறது. கலி யுகத்தில் இருப்பவர்கள் மந்தமானவர்களாக உள்ளனர், யாரும் நல்லவர்களாக இல்லை. மக்களுடைய தேவைகள் அதிகமாக இருப்பதால், உலகம் முழுவதும் பற்றாக்குறை நிலவுகிறது, அடுத்த வேளை உணவிற்கு உத்திரவாதம் இல்லை, அனைவரும் குழப்பத்தில் உள்ளனர். கலி யுகம் வளரவளர கடுமையான வரி விதிப்பினாலும் உணவுப் பற்றாக்குறையினாலும் மக்கள் துன்பப்படுவர் என்று பாகவதம் (12.2.9) கூறுகின்றது. வாழ்வின் துயரங்களைச் சமாளிக்க இயலாமல், வீடு, மனைவி, மக்கள் என அனைவரையும் துறந்து காட்டிற்குச் செல்லும் அளவிற்கு மக்கள் விரக்தியடைவர். இதுவே கலி யுகத்தின் நிலை.

ஐயாயிரம் வருடங்களுக்கு முன்பு கிருஷ்ணர் பகவத் கீதையை உரைத்த போது, மனுஷ்யாணாம் ஸஹஸ்ரேஷு, ஆயிரத்தில் ஒருவனே பக்குவமடைய முயற்சிப்பான் என்றார். ஆனால் இந்தக் கலி யுகத்தில் இலட்சத்தில் ஒருவனே பக்குவமடைய முயற்சிக்கின்றான்.

அத்தகைய நபர்களுக்கு, உன்னதமான பக்குவநிலையை அடைவதற்கான வழியை இந்த கிருஷ்ண பக்தி இயக்கத்தில் கற்றுத் தருகிறோம். இருப்பினும் பெரும்பாலான மக்கள் இதில் ஆர்வம் காட்டத் தயாராக இல்லை. நாய் அல்லது பூனையைப் போன்று வாழ்ந்து, தொடர்ந்து துன்பத்தை அனுபவிப்பதிலேயே அவர்கள் தங்களது காலத்தைக் கழிக்கிறார்கள்.

## கலி யுகத்தின் மிகச்சிறந்த நன்மை

இந்த கிருஷ்ண பக்தி இயக்கத்தை புரிந்துகொள்வது கடினம் என்றபோதிலும், கிருஷ்ணரின் கருணையினால் மிகவும் எளிதான முறையில் மக்கள் இதனை ஏற்றுக்கொள்ள முடியும். கலேர் தோஷ-நிதே ராஜன் அஸ்தி ஹ்யேகோ மஹான் குண:, (ஸ்ரீமத் பாகவதம் 12.3.51) கலி யுகத்தில் கடலளவு குற்றங்கள் இருந்தாலும் இதில் மிகச்சிறந்த நன்மை ஒன்று உள்ளது. கீர்தனாத் ஏவ கிருஷ்ணஸ்ய முக்த ஸங்க: பரம் வ்ரஜேத்: எளிமையான முறையில் ஹரே கிருஷ்ண மஹா மந்திரத்தை உச்சரித்தால் போதும், கலி யுகத்தின் எல்லா தொல்லைகளிலிருந்தும் விடுபட்டு, முக்தி பெற்று இறைவனின் திருநாட்டிற்குத் திரும்பிச் செல்லலாம். எனவே, கிருஷ்ண உணர்வில் இருங்கள்! வாழ்வில் பக்குவமடையுங்கள்! மிக்க நன்றி.

(தமிழாக்கம்: உஷா)

# ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
# ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே



# சூடிக் கொடுத்த சுடர்க்கொடி

*வழங்கியவர்: திருமதி. கிருஷ்ண காமினி தேவி தாஸி*

மிக உயர்ந்ததும் தொன்மை மிக்கதுமான வைஷ்ணவ தர்மம், ஆழமான பக்தி உணர்வுகள் மற்றும் நுணுக்கமான விளக்கங்களுடன் தெய்வீக மணங் கமழும் பொலிவு பெற்றதாகும். தனக்கு வேண்டியவற்றை எல்லாம் பகவான் பார்த்துக் கொள்வார் என்பதை உணர்ந்து, அவரது பாத கமலங்களுக்குத் தொண்டு புரிவதே தமது தொழில் என்று வாழ்வதே சரணாகதி எனப்படும் உயர்ந்த தத்துவமாகும். இதை நமக்குக் கற்றுக் கொடுப்பதற்காக இம்மண்ணுலகில் தோன்றிய பன்னிரண்டு ஆழ்வார்களில் ஒன்பதாவது ஆழ்வாராக ஆண்டாள் அவதரித்தாள். ஆண்டாளின் பெருமையை இங்கு சற்று பார்ப்போம்.

## ஆண்டாளின் அவதார நோக்கம்

*லக்ஷ்ம்யா ஸஹ ஹ்ருஷிகேஷ:* என்று உபநிஷத் சொல்கின்றது. அதாவது, பகவானின் ஒவ்வொரு அவதாரத்தின்போதும் அவருடைய பத்தினிகளும் உடன் அவதரிக்கின்றனர். பகவானின் துணைவியர் மூவர்—திருமகள், மண்மகள், ஆயர் மடமகள். திருமகள் என்பது லக்ஷ்மியையும், மண்மகள் என்பது பூமிப் பிராட்டியையும், ஆயர் மடமகள் என்பது நீளா தேவியையும் குறிக்கும்.

இரண்யாக்ஷன் என்ற அசுரன் பூமிப் பிராட்டியை சமுத்திரத்தினுள் கொண்டு சென்று மறைத்து வைத்தான். அப்போது பெருமாள் வராஹ அவதாரம் எடுத்து தனது கூரிய பற்களால் பூமிப் பிராட்டியை எடுத்தார். அப்போது பூமிப் பிராட்டியின் மேனி நடுங்க, எம்பெருமான் உடனடியாக அவளைத் தமது மடியில் அமர்த்தி ஆலிங்கனம் செய்து கொண்டார். தன்னை ஆட்கொண்டதுபோல் இப்பூமியிலுள்ள எண்ணிலடங்காத குழந்தைகளையும் உய்விக்க ஓர் உபாயம் சொல்லுமாறு அப்போது பூமிப் பிராட்டி பகவானிடம் வேண்டினாள். "ஒவ்வொரு ஜீவனின் மனம், வாக்கு, காயம் (உடல்) இம்மூன்றும் என்னிடத்தில் நிலைத்திருக்கட்டும்" என்று பகவான் பதிலளித்தார். மனம் நினைத்ததை வாய் பேசும்படியும், வாய் பேசியதை உடல் செய்யும்படியும் நாம் பழக்கப்படுத்த வேண்டும். மனம், வாக்கு, காயம் இம்மூன்றும் முழுமுதற் கடவுளான கிருஷ்ணரிடமே நிலைத்திருக்க வேண்டும். அவரை வாயினால் பாடி, மனத்தினால் சிந்திக்க வேண்டும் என்னும் சுலபமான வழியை நமக்கு எடுத்துரைக்க பூமிப் பிராட்டி உயர்ந்த வைகுண்டத்திலிருந்து பூமியில் அவதரித்தாள்.

## ஆண்டாளின் தோற்றம்

பன்னிரண்டு ஆழ்வார்களில் ஒருவரான பெரியாழ்வார் திருவில்லிபுத்தூரில் (ஸ்ரீவில்லிபுத்தூரில்) வசித்து வந்தார். அவர் பகவான் விஷ்ணுவைத் தனது சித்தத்தில் எப்போதும் வைத்திருந்ததால், அவருக்கு விஷ்ணுசித்தர் என்று மற்றொரு பெயரும் உண்டு. திருவில்லிபுத்தூர் கோவிலுக்கு அருகில் ஓர் அழகிய பூந்தோட்டம் அமைத்து, அதிலிருந்து மலர்களைச்



சேகரித்து மாலை தொடுத்து பகவானுக்கு சமர்ப்பித்து பெரியாழ்வார் கைங்கரியம் செய்து வந்தார். ஒருநாள் (ஆடி மாதம், பூர நட்சத்திரத்தன்று) அவர் மலர்களைச் சேகரித்துக் கொண்டிருந்தபோது, துளசிச் செடியின் அடியில் ஓர் அழகிய பெண் குழந்தையைக் கண்டார். அக்குழந்தைக்கு கோதை என்று பெயரிட்ட பெரியாழ்வார், அவளைத் தனது மகளாக வளர்க்கத் தொடங்கினார். கோதை என்றால் பூமாலை என்பது பொருள்.

## ஆழ்வார்களின் சந்ததியாக

பொய்கையாழ்வார், பேயாழ்வார், பூதத்தாழ்வார், திருமழிசை ஆழ்வார், நம்மாழ்வார், மதுரகவி ஆழ்வார், பெரியாழ்வார் ஆகிய ஆழ்வார்களின் ஒரே சந்ததியாக ஆண்டாள் கருதப்படுகிறாள். ஆழ்வார்கள், தங்களது சொத்துக்களான ஞானம், பக்தி, வைராக்கியம் ஆகிய மூன்றையும் தங்களின் ஒரே சந்ததியான ஆண்டாளுக்கு சீதனமாக கொடுத்தனர் என்றும் கூறப்படுகின்றது.

## சூடிக் கொடுத்த கோதை

கோதை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தாள். பெரியாழ்வார் கிருஷ்ண கதைகளைச் சொல்லிச் சொல்லி அவளை வளர்த்தார். விரைவில் கோதையின் மனமும் கிருஷ்ணரின் மீது முற்றிலும் மூழ்கியது. கோதையின் காதல் பெருக, கிருஷ்ணரை மட்டுமே திருமணம் செய்வது என்ற திடமான எண்ணத்தை ஆரம்பத்திலேயே மேற்கொண்டாள்.

திருவில்லிபுத்தூரில், பதினாறு அடி திருமேனி கொண்ட பெருமாள், வடபத்ரசாயி என்ற திருநாமத்துடன் ஆலிலைத் தளிரில் சயனித்திருக்கும் திருக்கோலத்தில் உள்ளார். அவருக்கு பெரியாழ்வார் தினமும் பூமாலை தொடுத்து சமர்ப்பித்து வந்தார்.

தன்னைப் பெருமாளின் மணமகளாகக் கருதிய கோதை, அவருக்கான மாலையை யாருக்கும் தெரியாமல் தான் முதலில் அணிந்து அழகு பார்த்து, பின்னர் கூடையில் வைத்து விடுவாள். இதை அறியாத பெரியாழ்வார், கோதை சூடிக் கொடுத்த மாலையினை பெருமாளுக்கு தினமும் சமர்ப்பித்து வந்தார். ஒருநாள் அந்த மாலையில் ஒரு தலைமுடி ஒட்டிக் கொண்டிருந்ததைக் கண்டு, அதனை அபசாரமாக எண்ணிய பெரியாழ்வார் பெருமாளுக்கு வேறு மாலையை சமர்ப்பித்தார். ஆனால், பெருமாளோ, கோதை சூடிக் களைந்த மாலையே தனக்கு ஏற்றது என்று பெரியாழ்வாரின் கனவில் தோன்றி உரைத்தார்.

பெருமாள் கூறியதைக் கேட்ட பெரியாழ்வார் பரவசத்தில் மூழ்கியபடி கண்ணீருடன் விழித்தெழுந்தார். தனது மகளின் பெருமையையும் பெருமாளே அவளை விரும்புவதையும் எண்ணி பூரிப்படைந்தார். அன்றிலிருந்து கோதை, ஆண்டாள் (பெருமாளை ஆண்டவள்) என்று பெயர் பெற்றாள். அதனைத் தொடர்ந்து ஆண்டாள் சூடிக் கொடுத்த மாலையே பெருமாளுக்கு அணிவிக்கப்பட்டது. இப்பழக்கம் இன்றும் பின்பற்றப்பட்டு வருகிறது.



ஆண்டாளை பெரியாழ்வார் கண்டெடுத்தல்

## ஆண்டாளின் விருந்தாவனம்

கிருஷ்ணர் தனது லீலைகளை அரங் கேற்றிய விருந்தாவனத்திற்குச் செல்ல ஆண்டாளுக்கு மிகுந்த ஆசை. ஆனால் அக்காலத்தில் நினைத்தவுடன் அங்கு செல்ல முடியாது என்பதால், தான் வசித்த திருவில்லிபுத்தூரை கோகுலமாகவும், தன் இல்லத்தை நந்தகோபரின் மாளிகையாகவும், வடபத்ரசாயியை கிருஷ்ணராகவும், தன்னை இடையர் குலப் பெண்ணாகவும், தன் தோழிகளை கோபியர்களாகவும் மனதில் நினைத்து வாழத் தொடங்கினாள். அதே மனோ பாவத்துடன் "திருப்பாவை" என்று அழைக்கப்படும் முப்பது பாசுரங்களைப் பாடினாள். மேலும், "நாச்சியார் திருமொழி" என்றழைக்கப்படும் 143 பாசுரங்களையும் பாடினாள்.

## ஆண்டாளின் திருக் கல்யாணம்

ஆண்டாள் திருமண வயதை அடைந்தவுடன், பெரியாழ்வார் தன் மகளிடம் திருமணத்திற்கு சம்மதம் கேட்க, "மானிடர்கள் எவரையும் நான் மணக்க மாட்டேன், அந்த கண்ணனே என் மணாளன்" என்று பதிலுரைத்தாள். பூலோக வைகுண்டமாகக் கருதப் படும் திருவரங்கத்தில் (ஸ்ரீரங்கத்தில்) சயனித்திருக்கும் அரங்கனை மட்டுமே மணமுடிப்பேன் என்று ஆண்டாள் விருப்பம் தெரிவித்தாள். தனது மகளுக்கு என்ன நடக்கும் என்ற விந்தையுடன் பெரியாழ்வார் வாழ்ந்தார்.

ஒருநாள் பெரியாழ்வாரின் கனவில் தோன்றிய ஸ்ரீ ஹரி, "உம்முடைய மகளைத் திருமணக் கோலத்தில் திருவரங்கம் அழைத்து வருக," என்று கட்டளையிட்டார். அதே போல் பாண்டிய மன்னன் வல்லபதேவரின் கனவிலும் தோன்றி, வில்லிபுத்தூருக்குப் போய் பெரியாழ்வாரையும் ஆண்டாளையும் திருவரங்கத்திற்கு அழைத்து வரும்படி பணித்தார்.

அலங்கரிக்கப்பட்ட பல்லக்கில் திருமணக் கோலத்தில் ஆண்டாள் திருவரங்கம் சென்றாள். கோவிலுக்குள் நுழைந்தவுடன் தன்னைக் கட்டுப்படுத்த இயலாமல், பல்லக்கிலிருந்து குதித்து கர்ப்ப கிரகத்தை நோக்கி ஓடினாள். உள்ளே சென்று அரங்கனின் திருவடிகளைத் தொட்டாள்; தொட்டவுடன் மறைந்தாள். முழுமுதற் கடவுளின் நித்திய லீலையில் பங்கேற்க சென்றாள். அப்போது அவளது வயது பதினைந்து மட்டுமே.

## ஆண்டாளும் இராமானுஜரும்

ஆண்டாள் தனது நாச்சியார் திருமொழியில், நூறு அண்டாக்களில் வெண்ணையும் நூறு அண்டாக்களில் அக்கார அடிசிலும் (சர்க்கரைப் பொங்கல்), திருமாலிருஞ்சோலை பகவானுக்கு அர்ப்பணிக்க விருப்பம் கொண்டு எழுதி வைத்தாள். அவள் தோன்றிய வெகு காலத்திற்கு பிறகு வந்த இராமானுஜாசாரியர், அப்பாடலைப் படித்து பரவசமடைந்து, ஆண்டாளின் விருப்பத்தை நிறைவேற்றினார்.

பின்னர், இராமானுஜர் திருவில்லிபுத்தூருக்கு ஆண்டாளை தரிசிப்பதற்காக கோவிலின் உள்ளே நுழைந்த போது, "எனது அண்ணன் வருகிறார்" என்ற ஆண்டாளின் அசரீரி கேட்டது. ஆண்டாளின் விருப்பத்தை இராமானுஜர் நிறைவேற்றிய காரணத்தினால், அவர் ஆண்டாளின் அண்ணனாகிறார்.

*திருமதி. கிருஷ்ண காமினி தேவி தாஸி, தனது குடும்பத்தினருடன் கிருஷ்ண பக்தியை வேலூரில் பயிற்சி செய்து வருகிறார்.*



திருவில்லிபுத்தூர் ரெங்க மன்னாருடன் திருமணக் கோலத்தில் ஆண்டாள்

### ஆண்டாளின் திருப்பாவை

ஆண்டாள் அருளிய திருப்பாவை மிகவும் சிறப்பு வாய்ந்தது. திருப்பாவையை அறியாதவர் மிகச் சிலரே. மிகவும் எளிமையாக கிருஷ்ணரைப் பற்றியும், அவரை வணங்கும் முறையைப் பற்றியும், கிருஷ்ணரின் பெருமைகளையும் ஆண்டாள் தனது திருப்பாவையில் சொல்லியுள்ளாள்.

ஆழ்வார்கள் பொதுவாக திருப்பள்ளியெழுச்சியும் திருப்பல்லாண்டும் பகவானுக்காகப் பாடியுள்ளார்கள். ஆனால் ஆண்டாள் மட்டுமே பகவானின் பக்தர்களை, அடியவர்களைத் தன் திருப்பாவையின் மூலம் துயில் எழுப்பியுள்ளாள். திருப்பாவையின் முக்கியமான பாசுரமாகக் கருதப்படும் கீழ்கண்ட ஐந்தாவது பாசுரத்தில் நாம சங்கீர்த்தனத்தின் சிறப்பினை அவள் அன்றே எடுத்துரைத்துள்ளாள்.

**மாயனை மன்னு வடமதுரை மைந்தனை**
**தூய பெருநீர் யமுனைத் துறைவனை**
**ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கை**
**தாயைக் குடல்விளக்கம் செய்ததா மோதரனை**
**தூயோமாய் வந்துநாம் தூமலர்தூ வித்தொழுது**
**வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க**
**போய பிழையும் புகுதருவான் நின்றனவும்**
**தீயினில் தூசாகும் செப்பேலோ ரெம்பாவாய்**

"வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க" என்னும் வரியின் மூலம், நாம் ஒவ்வொருவரும் கிருஷ்ணரின் திருநாமங்களைப் பாடி அவரை எப்போதும் மனதில் நிலைநிறுத்த வேண்டும் என்று வலியுறுத்துகிறாள். இவ்வாறு செய்தால் நாம் இதுவரை செய்த பாவங்களும், இனி செய்யவிருக்கும் பிழைகளும் தீயினில் தூசுபோல் அழிந்து போகும் என்று உறுதி கூறுகிறாள்.

# யார் முட்டாள்?

## சிந்திக்கத் தூண்டும் ஒரு சிறுகதை

படித்தவன் முட்டாளா? படிக்காதவன் முட்டாளா? உண்மையான முட்டாள் யார் என்பதை அறிய இந்த சிறுகதை உதவும்.


ஒரு முறை, ஒரு நாட்டின் மன்னனைக் காண ஒரு சாது வந்தார். நாட்டின் மன்னனாக இருப்பவர்கள் சாதுக்களின் அறிவுரையின்படி வாழ வேண்டும்—அதன்படி, மன்னனுக்கு அறிவுறுத்துவதற்காக சாதுக்கள் அரசவைக்கு அடிக்கடி வருவது வழக்கம். சாதுவைக் கண்ட மன்னன் பாரம்பரிய பழக்கத்தின்படி எழுந்து நின்று மிக்க மரியாதையுடன் அவரை வரவேற்று உபசரித்தான். மன்னனால் முறையாக வரவேற்கப்பட்ட சாது, மன்னனுக்குச் சில ஆன்மீக விஷயங்களை போதிக்க முயன்றார். ஆனால் மன்னனோ அதில் சற்றும் நாட்டம் காட்டவில்லை.

சாதுவிற்குத் தங்கம், வெள்ளி, மான்தோல், புலித்தோல் என்று ஏதேனும் ஒரு பரிசை வழங்கி, அதன் மூலம் அவரிடமிருந்து ஆசி பெறுவதில் மட்டும் மன்னன் குறியாக இருந்தான். பொன்னும் பொருளும் தனது ராஜ்ஜியத்தில் பொங்கி வளர வேண்டும், மக்கள் யாவரும் மன்னனான தனக்கு தயங்காது வரி செலுத்த வேண்டும் என்று மன்னன் ஆசியை வேண்டினான். “ஆன்மீக அறிவுரைகள் வேண்டாம், ஆசி மட்டும் கிடைத்தால் போதும்,” என்ற மன்னனின் மனப்பான்மையினை இன்றைய மக்களிடமும் நாம் காணலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

மன்னனுக்கு ஆசி வழங்கிய சாது, அவனிடம் ஒரு விருப்பத்தை முன்வைத்தார். சாதுவின் விருப்பம் மிகவும் விசித்திரமாக இருந்ததால், அதைக் கேட்டு அரசவையில் இருந்த அனைவரும் ஆச்சரியமடைந்தனர். அப்படி என்ன கேட்டார்? “இந்த ஊரிலேயே மிகப்பெரிய முட்டாள் ஒருவனைக் கண்டுபிடித்து அவனுக்கு வேலை கொடுப்பாயாக. அவனது கையில் ஒரு குச்சியைக் கொடுத்து ஊரெங்கும் வலம் வரச் சொல். அதுவே அவனது வேலையாக இருக்க வேண்டும், அதற்காக அவனுக்குத் தக்க ஊதியமும் வழங்க வேண்டும்.”—இதுவே சாதுவின் விருப்பம். சாதுவின் வேண்டுகோளைக் கேட்டு திகைப்புற்ற போதிலும், ஒரு வித பயத்தினால் காரணம் ஏதும் கேட்காமல், மன்னன் ஒப்புக் கொண்டான். சாதுவும் அரசவையை விட்டு வருத்தத்துடன் வெளியேறினார்.

சாதுவின் விசித்திரமான கட்டளையை மன்னன் மிகுந்த கவனத்துடன் நிறைவேற்றினான். தனது அமைச்சர்களின் உதவியுடன் நாட்டிலேயே மிகப்பெரிய முட்டாள் ஒருவனைக் கண்டுபிடித்தான். அவன் முட்டாளா என்பதை நன்கு சோதித்த பின்னர், அவனை வேலைக்கு அமர்த்திக் கொண்டான். அவன் கையில் ஒரு குச்சியைக் கொடுத்து ஊரெங்கும் வலம் வரும்படி கட்டளையிட்டான்.

மன்னன் தொடர்ந்து தனது நாட்டை திறம்பட ஆட்சி செய்து வந்தான். செல்வங்களைச் சேகரித்தான், இளவரசிகள் பலரை தனது இராணிகளாக் கினான், பல்வேறு மாளிகைகளைக் கட்டினான், மிக்க மகிழ்ச்சியுடன்



வரைபடம்: கலாநிதி தாஸ்

சாதுவின் விருப்பத்தைக் கேட்டு ஆச்சரியமுற்ற மன்னர்

வாழ்வைக் கழித்தான். முட்டாளும் முட்டாள்தனமாக ஊரெங்கும் குச்சியுடன் வலம் வந்தான்.

காலங்கள் உருண்டோடின. மன்னனை வயோதிகம் வாட்டத் தொடங்கியது, படுத்த படுக்கையானான். விரைவில் மரணத்தைத் தழுவப் போவதை அறிந்து, உற்றார், உறவினர் என அனைவரையும் சந்திக்கப் பேராவல் கொண்டான். அண்டை நாட்டு மன்னர்கள், நாட்டின் முக்கியஸ்தர்கள் என அனைவரும் மரணப் படுக்கையில் இருந்த மன்னனை தினமும் சந்தித்து வந்தனர். அச்சமயத்தில் மன்னனைக் காண முட்டாளும் தனது குச்சியுடன் வந்தான்.

நீண்ட நாட்கள் கழித்து, மன்னனைக் கண்ட மகிழ்ச்சியில், முட்டாள், ‘‘நீடூழி வாழ்க மன்னா,’’ என்று வாழ்த்து கோஷம் எழுப்பினான். தனது நிலையை உணராமல், வாழ்த்து கோஷம் எழுப்பும் முட்டாளை எண்ணி வருந்திய மன்னர், ‘‘நான் வாழ்ந்த காலம் முடிந்துவிட்டது, செல்ல வேண்டிய காலம் வந்துவிட்டது,’’ என்று பதிலளித்தார்.

‘‘எங்குச் செல்கிறீர்கள் மன்னா? எப்போது வருவீர்கள்?’’

‘‘வெகு தூரம் செல்கிறேன். திரும்பி வருவதாக இல்லை.’’


‘‘என்னையும் அழைத்துச் செல்லுங்களேன் மன்னா!’’

‘‘அங்கெல்லாம் உன்னைக் கூட்டிச் செல்ல இயலாது.’’

‘‘அப்படியெனில் இராணியர்களோடு தனியாகச் செல்லப் போகிறீர்! அதற்குத்தான் என்னை வேண்டாம் என்கிறீர்களோ?’’

முட்டாளின் முட்டாள்தனத்தை எண்ணி மன்னனுக்குச் சற்று கோபம் ஏற்பட்டது. இருப்பினும் சற்று பொறுமையுடன் தன்னுடைய இராணியர்களை எல்லாம் அங்கு கூட்டிச் செல்ல இயலாது என்ற தெளிவான உண்மையை முட்டாளுக்கு எடுத்துரைத்தான்.

‘‘இளைய இராணியரை மட்டுமாவது அழைத்துச் செல்லுங்களேன்.’’



மரணப் படுக்கையில் கிடந்த மன்னனிடம் முட்டாள்தனமான கேள்விகளைக் கேட்கும் முட்டாள்

வரைபடம்: கலாநிதி தாஸ்

‘‘இல்லை. நான் மட்டும் தனியாகத் தான் செல்ல வேண்டும்.’’

‘‘அப்படியெனில் அமைச்சர் தங்களுக்காக அற்புதமான குதிரை வண்டியை ஏற்பாடு செய்திருப்பார், தங்களிடம்தான் எண்ணிலடங்காத குதிரைகள் உள்ளனவே.’’

அதிகரித்த கோபத்துடன், மன்னர், ‘‘முட்டாளே, குதிரைகளையும் என்னுடன் கூட்டிச் செல்ல இயலாது.’’

‘‘பாதயாத்திரையாகச் செல்ல உள்ளீரோ! வழிச் செலவிற்காகச் சற்று தங்க நாணயங்களையாவது எடுத்துச் செல்லுங்கள்.’’

முட்டாளின் முட்டாள்தனமான கேள்விகளை இனிமேலும் பொறுத்துக் கொள்ள இயலாத மன்னன், அவனுடைய பேச்சுகளை உடனே நிறுத்தும்படி கட்டளையிட்டான். இருப்பினும், சாதுவின் பேச்சைக் கேட்டு இந்த முட்டாளை வேலைக்கு வைத்தோம் என்ற காரணத்தினால், ‘‘இத்தனை காலம் நீ முட்டாளாக குச்சியுடன் நகரத்தைச் சுற்றி வந்ததால் உனக்கு இப்போது ஓய்வு தருகிறேன். இனிமேலும் நீ சுற்றி வரத் தேவையில்லை, உனக்கு தொடர்ந்து ஊதியம் வழங்கப்படும். ஆனால் இந்த குச்சியை உன்னைவிடச் சிறந்த ஒரு முட்டாளைக் கண்டுபிடித்து அவனிடம் நீ கொடுக்க வேண்டும். அவனுக்கும் தக்க ஊதியம் வழங்க ஏற்பாடு செய்கிறேன்,’’ என்று உரைத்தார்.

பெரிய முட்டாளைக் கண்டுபிடித்து குச்சியைக் கொடுக்கும்படி மன்னன் கட்டளையிட, அந்த முட்டாள் உடனடியாக தனது குச்சியினை மன்னரிடம் நீட்டினான். ‘‘பிடித்துக் கொள்ளுங்கள் மன்னா.’’ கோபத்தில் வெகுண்டெழுந்த மன்னன், ‘‘என்ன தைரியம் உனக்கு, என்னையே பெரிய முட்டாள் என்கிறாயா?’’ என்று சவால் விடுத்தான்.

முட்டாள் தனது பேச்சின் தொனியை மாற்றினான்.

‘‘நிச்சயம் மன்னா. நீங்களே பெரிய முட்டாள். ஆசையுடன் அனுபவித்த அரசியரையும், கஷ்டப்பட்டு கட்டிக்காத்த கஜானாவையும், பாசத்துடன் பார்த்து வளர்த்த படைகளையும், குதிரைகளையும் குழந்தைகளையும் அழைத்துச் செல்ல இயலாது என்று சொல்கிறீர்கள். ஆனால் எங்குச் செல்கிறோம் என்பதை நீங்கள் உணரவில்லை. எங்கு

செல்கிறோம், ஏன் செல்கிறோம், எப்படிச் செல்கிறோம், யாருடன் செல்கிறோம், எதற்குச் செல்கிறோம் என்று எதையும் அறியாமல் எங்கோ செல்லும் உம்மைவிட பெரிய முட்டாள் யார் இருக்க முடியும்? இராணியரைச் சேர்த்தீர், குழந்தைகளைப் பெற்றீர், சேனைகளை வளர்த்தீர், பல ராஜ்ஜியங்களை வென்றீர், சொத்துக்களைக் குவித்தீர், கஜானாவையும் நிரப்பினீர். ஆனால் என்ன பிரயோஜனம்?

நான் யார்? ஏன் பிறந்தேன்? ஏன் துன்பப்படுகிறேன்? வாழ்வின் குறிக்கோள் என்ன? கடவுள் யார்? கடவுளுக்கும் நமக்கும் என்ன சம்பந்தம்? மரணம் என்றால் என்ன? பிறப்பிற்கும் இறப்பிற்கும் அப்பால் இருப்பது என்ன? என்று எதையும் தெரிந்து கொள்ளாமல் இந்த பூமியில் வாழ்ந்து என்ன பலன்?"

முட்டாளின் சொற்களில் பொதிந்திருந்த ஆழமான கருத்துகள் மன்னனின் நெஞ்சில் பசுமரத்தாணி போல நன்றாகப் பதிந்தன. குச்சியை வைத்துக் கொண்டு ஊரை வலம் வந்த முட்டாளிடம் இத்தனை ஞானமா! மன்னருக்கு சந்தேகம் எழ, தான் உண்மையில் முட்டாள் அல்ல என்றும், பல வருடங்களுக்கு முன்பு தங்களைக் காண வந்த சாதுவின் சீடன் என்றும், தக்க தருணத்தில் ஆன்மீக உபதேசம் அளிப்பதற்காக முட்டாளாக நடித்தேன் என்றும் விளக்கினான்.

கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்வதுபோல, மரணம் தன்னை நெருங்கி வந்த பின்னர், வாழ்வின் உண்மையான பிரச்சனைகள் மன்னருக்குப் புரியத் தொடங்கின; வாழ்வை வீணடித்துவிட்டதாகப் புலம்பத் தொடங்கினான். இருப்பினும், எஞ்சியுள்ள காலங்களாவது பூரண கிருஷ்ண பக்தியில் பங்கு கொண்டு, பகவத் கீதையைப் படித்து, ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, கிருஷ்ண கிருஷ்ண, ஹரே ஹரே/ ஹரே ராம, ஹரே ராம, ராம ராம, ஹரே ஹரே என்ற மஹா மந்திரத்தை உச்சரிக்கும்படி மன்னனுக்கு அவன் அறிவுறுத்தினான்.



முட்டாளின் வார்த்தைகளால் பாதிக்கப்பட்டு வருத்தத்தில் நிற்கும் மன்னர். (இப்படம், "பிரபுபாத தியேட்டர்ஸ்" நாடகக் குழுவினரால் இக்கதை நாடகமாக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட ஒன்று)

தன்னையே பெரிய முட்டாளாக ஏற்றுக் கொண்ட மன்னன், தன்னைப் போல முட்டாளாக இருந்துவிடாதீர்கள் என்று தனது பிரஜைகளுக்கு அறிவுறுத்தினான். எஞ்சிய குறுகிய காலத்தில் கிருஷ்ண பக்தியில் முழுமையாக ஈடுபட்டான்.

இருப்பினும், அவனது வாழ்வின் பெரும் பகுதி, ஒரு பெரிய முட்டாளின் வாழ்க்கையாகவே அமைந்தது. உண்மையில் நாம் சற்று யோசித்துப் பார்த்தால், நம்மில் பெரும்பாலானோர் ஆன்மீக வாழ்வில் ஆர்வம் காட்டாமல், உலகச் சொத்துக்களைச் சேகரிப்பதிலும் இன்பமடைவதிலும் முழுமூச்சாக செயல் பட்டுக் கொண்டுள்ளோம். ஆனால் அவை அனைத்தையும், அல்லது அவற்றில் ஏதேனும் ஒன்றைக்கூட மரணத்தின்போது நம்மால் கொண்டு செல்ல இயலாது. இந்த உண்மையை உணர்ந்து, பெரிய முட்டாளாக இருக்காமல், வாழ்வின் எந்த நிலையில் இருந்தாலும், அந்த நிலையில் இருந்தபடி கிருஷ்ண பக்தியை தீவிரமாகப் பயிற்சி செய்வதால் புத்திசாலியாக வாழ முடியும்.

பற்பல பிறவிகளைக் கடந்த பின்னர், யாரொருவன் புத்திசாலியோ, அவன் எல்லா காரணங்களுக்கும் காரணமான கிருஷ்ணரிடம் சரணடைவான். அத்தகைய மஹாத்மா மிகவும் அரிதானவன் என்று பகவத் கீதை (7.19) கூறுகின்றது. கலி யுகத்தில் இருக்கும் புத்திசாலி மனிதர்கள், "ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, கிருஷ்ண கிருஷ்ண, ஹரே ஹரே/ ஹரே ராம, ஹரே ராம, ராம ராம, ஹரே ஹரே" என்னும் பகவானின் திருநாமங்களை உச்சரித்து சங்கீர்த்தனத்தில் ஈடுபடுவர் என்று ஸ்ரீமத் பாகவதம் (11.5.32) கூறுகின்றது. முட்டாளாக இருக்க வேண்டுமா, புத்திசாலியாக மாற வேண்டுமா என்பது நாம் ஒவ்வொருவரும் முடிவு செய்ய வேண்டிய ஒன்று.

(இக்கட்டுரை, பூனேயில் உள்ள இஸ்கான் கோவிலின் தலைவராகத் தொண்டுபுரியும் திரு. ராதேஷ்யாம தாஸ் M.Tech அவர்கள் எழுதிய *Discover Yourself* என்னும் புத்தகத்தில் கொடுக்கப்பட்ட கதையை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டதாகும்.)




ஜடவுலகின் மிகவுயர்ந்த லோகத்திலிருந்து மிகத்தாழ்ந்த லோகம் வரை, அனைத்தும் பிறப்பும் இறப்பும் மாறி மாறி நடைபெறும் துன்பம் நிறைந்த இடங்களே. ஆனால், குந்தியின் மகனே, என்னுடைய இடத்தை அடைபவன் என்றும் மறுபிறவி எடுப்பதில்லை. (பகவத் கீதை 8.16)
















## கருத்து

**மக்களில் பெரும்பாலானோர் இப்படித்தான் ஆர்வமின்றி கபடத்தனத்துடன் உள்ளனர். அவர்கள், வீட்டு வேலைகள், குடும்ப உறுப்பினர்களின் தேவைகள், தங்களது ஆசைகள், வியாதிகள் என பலதரப்பட்ட விஷயங்களில் சிக்கிக் கொண்டு, உயர்ந்த ஆச்சாரியர்களிடமிருந்து தெய்வீக விஷயங்களைக் கேட்பதற்கு நேரத்தை ஒதுக்குவதில்லை. குடும்பப் பொறுப்புகளை முடித்த பின்னர் ஆன்மீகத்தைப் பார்த்துக் கொள்ளலாம் என்று நினைக்கின்றனர். ஆனால் அத்தகைய பொறுப்புகளும் பந்தங்களும் என்றும் முடிவுபெறாதவை. பக்தித் தொண்டினை உடனடியாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நாம் முடிவு செய்யாவிடில், பக்தியினை என்றுமே எடுத்துக்கொள்ள மாட்டோம்.**

பக்தியில் யோகிகளான மகாத்மாக்கள் என்னை அடைந்த பிறகு, முற்றிலும் துன்பம் நிறைந்த இந்த தற்காலிகமான உலகத்திற்குத் திரும்பி வருவதே இல்லை; ஏனெனில், அவர்கள் மிகவுயர்ந்த பக்குவத்தை அடைந்துவிட்டனர். (பகவத் கீதை 8.15)








* கிருஷ்ண லீலைகளின் அமிர்தத்தில் மூழ்க
* ஸ்ரீமத் பாகவதத்தின் பத்தாம் காண்ட சுருக்கம்
* இருபதாம் நூற்றாண்டின் மாபெரும் பக்தரான ஸ்ரீல பிரபுபாதரிடமிருந்து கிருஷ்ண லீலைகளை கேட்கும் வாய்ப்பு
* 90 அத்தியாயங்கள்
* 770 பக்கங்கள், 16 வண்ணப்படங்கள்
* அனைத்து இஸ்கான் கோவில்களிலும் கிடைக்கும்
* மேலும் விபரங்களுக்கு, 98948 14553

# கிருஷ்ணா

புருஷோத்தமரான முழுமுதற் கடவுள்




# 2012

**ஜனவரி**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தி | 30 | 2 | 9 | 16 | 23 |
| செ | 31 | 3 | 10 | 17 | 24 |
| பு | | 4 | 11 | 18 | 25 |
| வி | | 5 | 12 | 19 | 26 |
| வெ | | 6 | 13 | 20 | 27 |
| ச | | 7 | 14 | 21 | 28 |
| ஞா | 1 | 8 | 15 | 22 | 29 |

**பிப்ரவரி**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தி | | 6 | 13 | 20 | 27 |
| செ | | 7 | 14 | 21 | 28 |
| பு | 1 | 8 | 15 | 22 | 29 |
| வி | 2 | 9 | 16 | 23 | |
| வெ | 3 | 10 | 17 | 24 | |
| ச | 4 | 11 | 18 | 25 | |
| ஞா | 5 | 12 | 19 | 26 | |

**மார்ச்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தி | | 5 | 12 | 19 | 26 |
| செ | | 6 | 13 | 20 | 27 |
| பு | | 7 | 14 | 21 | 28 |
| வி | 1 | 8 | 15 | 22 | 29 |
| வெ | 2 | 9 | 16 | 23 | 30 |
| ச | 3 | 10 | 17 | 24 | 31 |
| ஞா | 4 | 11 | 18 | 25 | |

**ஏப்ரல்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தி | 30 | 2 | 9 | 16 | 23 |
| செ | | 3 | 10 | 17 | 24 |
| பு | | 4 | 11 | 18 | 25 |
| வி | | 5 | 12 | 19 | 26 |
| வெ | | 6 | 13 | 20 | 27 |
| ச | | 7 | 14 | 21 | 28 |
| ஞா | 1 | 8 | 15 | 22 | 29 |

**மே**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தி | | 7 | 14 | 21 | 28 |
| செ | 1 | 8 | 15 | 22 | 29 |
| பு | 2 | 9 | 16 | 23 | 30 |
| வி | 3 | 10 | 17 | 24 | 31 |
| வெ | 4 | 11 | 18 | 25 | |
| ச | 5 | 12 | 19 | 26 | |
| ஞா | 6 | 13 | 20 | 27 | |

**ஜுன்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தி | | 4 | 11 | 18 | 25 |
| செ | | 5 | 12 | 19 | 26 |
| பு | | 6 | 13 | 20 | 27 |
| வி | | 7 | 14 | 21 | 28 |
| வெ | 1 | 8 | 15 | 22 | 29 |
| ச | 2 | 9 | 16 | 23 | 30 |
| ஞா | 3 | 10 | 17 | 24 | |

**ஜுலை**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தி | 30 | 2 | 9 | 16 | 23 |
| செ | 31 | 3 | 10 | 17 | 24 |
| பு | | 4 | 11 | 18 | 25 |
| வி | | 5 | 12 | 19 | 26 |
| வெ | | 6 | 13 | 20 | 27 |
| ச | | 7 | 14 | 21 | 28 |
| ஞா | 1 | 8 | 15 | 22 | 29 |

**ஆகஸ்ட்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தி | | 6 | 13 | 20 | 27 |
| செ | | 7 | 14 | 21 | 28 |
| பு | 1 | 8 | 15 | 22 | 29 |
| வி | 2 | 9 | 16 | 23 | 30 |
| வெ | 3 | 10 | 17 | 24 | 31 |
| ச | 4 | 11 | 18 | 25 | |
| ஞா | 5 | 12 | 19 | 26 | |

**செப்டம்பர்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தி | | 3 | 10 | 17 | 24 |
| செ | | 4 | 11 | 18 | 25 |
| பு | | 5 | 12 | 19 | 26 |
| வி | | 6 | 13 | 20 | 27 |
| வெ | | 7 | 14 | 21 | 28 |
| ச | 1 | 8 | 15 | 22 | 29 |
| ஞா | 2 | 9 | 16 | 23 | 30 |

**அக்டோபர்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தி | 1 | 8 | 15 | 22 | 29 |
| செ | 2 | 9 | 16 | 23 | 30 |
| பு | 3 | 10 | 17 | 24 | 31 |
| வி | 4 | 11 | 18 | 25 | |
| வெ | 5 | 12 | 19 | 26 | |
| ச | 6 | 13 | 20 | 27 | |
| ஞா | 7 | 14 | 21 | 28 | |

**நவம்பர்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தி | | 5 | 12 | 19 | 26 |
| செ | | 6 | 13 | 20 | 27 |
| பு | | 7 | 14 | 21 | 28 |
| வி | 1 | 8 | 15 | 22 | 29 |
| வெ | 2 | 9 | 16 | 23 | 30 |
| ச | 3 | 10 | 17 | 24 | |
| ஞா | 4 | 11 | 18 | 25 | |

**டிசம்பர்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தி | 31 | 3 | 10 | 17 | 24 |
| செ | | 4 | 11 | 18 | 25 |
| பு | | 5 | 12 | 19 | 26 |
| வி | | 6 | 13 | 20 | 27 |
| வெ | | 7 | 14 | 21 | 28 |
| ச | 1 | 8 | 15 | 22 | 29 |
| ஞா | 2 | 9 | 16 | 23 | 30 |

- மார்ச் 8, கௌர பூர்ணிமா
- ஏப்ரல் 1, இராம நவமி
- மே 5, நரசிம்ம சதுர்தசி
- ஆகஸ்ட் 2, பலராம பூர்ணிமா
- ஆகஸ்ட் 10, கிருஷ்ண ஜென்மாஷ்டமி
- செப்டம்பர் 23, ராதாஷ்டமி
- அக்டோபர் 23, கோவர்தன பூஜை

ஏகாதசி திருநாள்



தமிழில் உள்ள ஒரே முழுப் பதிப்பு
சர்வ வேதாந்த சாரம் எனப்படும்
ஸ்ரீமத் பாகவதம்
பக்தி, யோகம், தியானம் போன்றவற்றின் முழுமையான கலைக்களஞ்சியம்
288 வண்ணப்படங்கள்
12 காண்டங்கள், 18 புத்தகங்கள்
16,000 பக்கங்களுக்கு மேல்
18,000 ஸ்லோகங்களும் அடங்கியது
அனைத்து வேத இலக்கியங்களின் தலைசிறந்த மணிமகுடமாகத் திகழும் ஸ்ரீமத் பாகவத மஹா புராணம், வேதங்கள் என்னும் கற்பக மரத்தின் கனிந்த பழமாகும். இது சாக்ஷாத் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் இலக்கிய அவதாரம். வேதாந்த சூத்திரத்திற்கு வேத வியாசரே அளித்த இயற்கையான விளக்கவுரை.
பிரபஞ்சத்தின் முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை படைப்பு, கோள்களின் நிலை, படைப்பின் மூல தத்துவம், இறை விஞ்ஞானம், முக்தி, இறுதி இலக்கு, மற்றும் பல விஷயங்களை விஞ்ஞான ரீதியாக விளக்கக்கூடிய களங்கமற்ற புராணம்.
புலன் உணர்வுகளுக்கு அப்பாற்பட்ட மிக உயர்ந்த அனுபவமான ஸ்ரீமத் பாகவதம், பரமஹம்ஸ நிலையில் உள்ளவர்கள் சுவைக்கும் அமிர்தமாகும்.
ஒவ்வொரு ஸ்லோகத்திற்கும் அதன் மூல சமஸ்கிருத வடிவம், தமிழ் வடிவம், வார்த்தைக்கு வார்த்தை அர்த்தம், மொழிபெயர்ப்பு, மற்றும் தெளிவான பொருளுரைகளை வழங்கும் செம்மையான நூல்கள்.

# பகவத் கீதையும் ஜாதியும்




ஜாதி—தமிழகத்தில் மிகவும் பிரபலமான வார்த்தை. ஏன் இத்தனை ஜாதிகள்? எங்கிருந்து வந்தன? என்ன பயன்?—பலரிடம் பதில் இல்லை; மக்கள் இவற்றைக் கேட்பதும் இல்லை. "என்னுடைய ஜாதியே உயர்ந்தது" என்று சிலர் நினைக்க, சமுதாயத்தின் ஏற்றத்தாழ்வுகள் ஜாதிகளால்தான் வந்தன என்றும் ஜாதிகளே வேண்டாம் என்றும் வேறு சிலர் கூறுகின்றனர்.

பகவத் கீதை ஜாதி வேற்றுமையினைப் பரப்புகின்றது என்று கூறி, கீதையைப் படிக்கக் கூடாது, புறக்கணிக்க வேண்டும் என்று கூறுபவர்களும் உள்ளனர். ஜாதி அமைப்பின் நுணுக்கங்களை சிறு கட்டுரையில் எழுதிவிட முடியாது என்றபோதிலும், பகவத் கீதைக்கும் ஜாதிக்கும் இடையிலுள்ள விஷயங்களை அறிய முற்படுவோம்.

**வழங்கியவர்கள்:** ஜெய கிருஷ்ண தாஸ் & ஸ்ரீ கிரிதாரி தாஸ்

## வர்ணாஷ்ரமம்—ஓர் அடிப்படை விளக்கம்

வர்ணாஷ்ரமம் என்று அறியப்படும் வழிமுறை பகவத் கீதையில் மட்டுமின்றி இதர வேத சாஸ்திரங்களிலும் விளக்கப்பட்டுள்ளது. வர்ணாஷ்ரமம் என்னும் சொல், வர்ணம், ஆஷ்ரமம் ஆகிய இரு சொற்களின் கலப்புச் சொல்லாகும். **வர்ணம்** என்பது, பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் ஆகிய நான்கு சமுதாயப் பிரிவுகளையும், **ஆஷ்ரமம்** என்பது பிரம்மசாரி, கிருஹஸ்தர், வானபிரஸ்தர், சந்நியாசி ஆகிய நான்கு ஆன்மீகப் பிரிவுகளையும் குறிக்கும்.

வர்ணத்தின் (அல்லது சமுதாயத்தின்) நான்கு பிரிவுகளும் அதன் உட்பிரிவுகளும் ஜாதி என்ற பெயரிலும் அறியப்படுகின்றன. இருப்பினும், ஜாதி என்ற வார்த்தைக்கு இன்றைய மக்கள் எடுத்துக்கொள்ளும் பொருளும் சாஸ்திரங்களில் கொடுக்கப்பட்டுள்ள பொருளும் வேறுபட்டவை.

ஜாதி என்பதை இன்றைய சமுதாயம் பிறப்பின் அடிப்படையில் ஏற்றுக்கொள்கிறது. ஆனால் வேத சமுதாயம் குணத்தின் அடிப்படையிலும் செய்யும் தொழிலின் அடிப்படையிலும் அதனை ஏற்றுக்கொள்கிறது. இன்றைய சமுதாயத்தில் பிராமணரின் மகனாகப் பிறந்தவன் பிராமண ஜாதியைச் சேர்ந்தவனாக ஏற்கப்படுகிறான்; ஆனால் முறையான சாஸ்திரங்களின்படி, ஒருவன் பிராமணரின் மகனாகப் பிறந்தாலும் அவனிடம் பிராமணத் தன்மைகள் இல்லாவிடில், அவன் பிராமணனாக ஏற்கப்படுவதில்லை.

சமுதாயப் பிரிவுகள் பிறப்பின் அடிப்படையில் அல்ல, தகுதிகளின் அடிப்படையிலேயே என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ளுதல் அவசியம். ஒரு மருத்துவரின் மகன், மருத்துவக் குடும்பத்தில் பிறந்ததால் மட்டும் மருத்துவனாக ஏற்றுக்கொள்ளப்படுவானா? நிச்சயம் இல்லை. அவனும் மருத்துவக் கல்வி பெற்று போதிய தகுதியை அடையும்போது, அவன் மருத்துவனாக ஏற்றுக்கொள்ளப்படுவான். அதுபோலவே, வேத சாஸ்திரங்களில், பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் ஆகிய நான்கு பிரிவினருக்கும் சில தகுதிகள் விளக்கப்பட்டுள்ளன. அத்தகைய தகுதியுடையவர்கள் மட்டுமே அப்பிரிவுகளினுள் அடங்குவர். தகுதியற்ற நபர்கள் வர்ணத்திற்கு அப்பாற்பட்டவராக புறக்கணிக்கப்படுகின்றனர்.

**சமுதாயப் பிரிவுகள் பிறப்பின் அடிப்படையில் அல்ல, தகுதிகளின் அடிப்படையிலேயே என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ளுதல் அவசியம். ஒரு மருத்துவரின் மகன், மருத்துவக் குடும்பத்தில் பிறந்ததால் மட்டும் மருத்துவனாக ஏற்றுக்கொள்ளப்படுவானா?**

## கிருஷ்ணரால் படைக்கப்பட்ட பிரிவுகள்

இந்த நான்கு வர்ணங்களும் முழுமுதற் கடவுளான பகவான் ஸ்ரீ கிருஷ்ணரால் படைக்கப்பட்டவை. கிருஷ்ணரே இதனை பகவத் கீதையில் (4.13) உறுதிசெய்கிறார்: *சாதுர் வர்ண்யம் மயா ஸ்ருஷ்டம்.* இவை குணத்தின் அடிப்படையிலும் செய்யும் செயலின் அடிப்படையிலும் பகுக்கப்பட்டவை என்று அவர் கூறுகிறார். *குண-கர்ம-விபாகஷ:.* பிறப்பின் அடிப்படையில் சமுதாயத்தைப் பிரிப்பதாக கிருஷ்ணர் பகவத் கீதையில் எங்கும் கூறவில்லை. பிறப்பை அடிப்படையாகக் கொண்ட இன்றைய ஜாதி அமைப்பு கிருஷ்ணரால் ஏற்படுத்தப்பட்டதல்ல.

## பிரிவுகள் அவசியமா?

பிறப்பின் அடிப்படையிலா, தகுதிகளின் அடிப்படையிலா என்ற வாதம் ஒருபுறம் இருக்கட்டும்—இந்த நான்கு பிரிவுகள் அவசியம்தானா என்ற கேள்வி எழலாம். அனைத்து மனிதர்களின் உடலிலும் சிகப்பு இரத்தம்தானே ஓடுகிறது, எதற்காக இந்தப் பிரிவுகள் என்று நினைக்கலாம். காரணத்தைக் காண்போம்.

உலகிலுள்ள ஒவ்வொரு ஜீவனும் பல்வேறு ஆசைகளைக் கொண்டுள்ளான். அவற்றை நிறை வேற்றுவதற்காக பல தரப்பட்ட உடல்கள் ஜீவன்களுக்கு வழங்கப்படுகின்றன. அதன்படி, நீர்வாழ்வன, தாவரங்கள், ஊர்வன, பறப்பன, விலங்குகள், மனிதர்கள் என மொத்தம் 84,00,000 வகையான உயிரினங்கள் உள்ளன. ஜீவன்கள் தத்தமது விருப்பத்திற்கு ஏற்ப, பல்வேறு உயிரினங்களில் மாறி மாறி பிறவியெடுத்து இவ்வுலகில் சுற்றிக் கொண்டுள்ளன.

ஜீவன்களின் உண்மையான நன்மையை என்றும் விரும்பும் முழுமுதற் கடவுளான பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் அவர்களின் விருப்பங்களை பூர்த்தி செய்வதற்கு மேலோட்டமான அனுமதியைக் கொடுத்தாலும், அவர்கள் பிறவித் துன்பத்திலிருந்து நிரந்தரமாக விடுதலை பெற வேண்டும் என்று பேராவல் கொண்டுள்ளார். பெறற்கரிய மானிடப் பிறவியைப் பெற்ற மனிதர்களுக்கு மத்தியிலும் பலதரப்பட்ட ஆசைகளும் தன்மைகளும் இருப்பதால், அதற்கு ஏற்றவாறு சமுதாயத்தினை நான்கு வர்ணங்களாக அவர் பிரித்துள்ளார். இப்பிரிவுகளின் மூலம் புலனின்பத்தில் மூழ்கியுள்ள மக்களைப் படிப்படியாக அவற்றிலிருந்து விடுவித்து முக்தியடையச் செய்யும் வகையில் மொத்த வழிமுறையையும் அவர் வடிவமைத்துள்ளார்.



பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்னும் நான்கு பிரிவுகள், சமுதாயத்தின் வளர்ச்சிக்கு மிகவும் அவசியம்

உண்மையில், உலகின் எல்லாப் பகுதிகளிலும் பிரிவுகள் உள்ளன. பிரிவுகளுக்கு ஏற்றாற்போல சமுதாயத்தில் மதிப்பும் உள்ளது. உதாரணமாக, ஒரு தொழிற்சாலையை எடுத்துக் கொண்டால் அங்கும் நான்கு பிரிவுகள் இருப்பதைக் காணலாம். தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் பொருட்களை தரமுள்ளதாக வடிவமைப்பதற்கென்று இருக்கும் புத்திசாலிகள் ஒரு பிரிவினர்; தொழிற்சாலையை நிர்வகிப்பவர்கள் இரண்டாம் பிரிவினர்; பொருட்களை மக்களிடையே கொண்டு சென்று வர்த்தகம் புரிவோர் மூன்றாம் பிரிவினர்; பணி புரிந்து பொருட்களை தயாரிப்பவர்கள் நான்காம் பிரிவினர். இத்தகைய பிரிவுகள் (துறைகள்) ஒரு தொழிற்சாலையில் இல்லாவிடில் அத்தொழிற்சாலை திறம்பட செயல்பட இயலாது.

அதுபோல, சமுதாயம் என்னும் தொழிற்சாலையிலும் நான்கு பிரிவினர் அவசியம். மக்களை தரமுள்ளவர்களாக வடிவமைப்பதற்காக ஆன்மீக விஷயங்களை எடுத்துக்கூறுபவர்கள் பிராமணர்கள் என்றும், சமுதாயத்தை நிர்வகித்து மக்களைப் பாதுகாப்பவர்கள் சத்திரியர்கள் என்றும், விவசாயம் செய்து வாணிபம் செய்பவர்கள் வைசியர்கள் என்றும், உடலால் உழைத்து வாழ்பவர்கள் சூத்திரர்கள் என்றும் அழைக்கப்படுகின்றனர்.

தொழிற்சாலையின் ஒவ்வொரு குறிப்பிட்ட துறையைச் சார்ந்தவருக்கும் குறிப்பிட்ட தகுதிகள் இருப்பதுபோல, சமுதாயத் துறைகளிலும் ஒவ்வொருவருக்கும் குறிப்பிட்ட தகுதிகளும் கடமைகளும் உள்ளன.

## பிராமணரின் கடமைகள்

மனித சமுதாயத்தினை ஓர் உடலுடன் ஒப்பிட்டால், பிராமணர்கள் அதன் தலையைப் போன்றவர்கள். அவர்கள் வேதங்கள், உபநிஷத்துக்கள், புராணங்கள், மற்றும் பஞ்சராத்ரங் களைக் கொண்டு, கிருஷ்ணரைப் பற்றிய ஞானத்தினை அறிந்து, சமூகத்தின் மற்ற பிரிவினர்களுக்கு உபதேசித்து வழிநடத்துவர். இவர்கள் சம்பளம் எதுவும் பெறாமல், தானம் பெற்று தங்களது வாழ்வை நடத்த வேண்டும். இவர்களின் தேவைகளை பூர்த்தி செய்வது சத்திரியர்களுக்கும் வைசியர்களுக்கும் உள்ள ஒரு கடமையாகும். இவர்கள் ஸத்வ குணத்தில் இருத்தல் அவசியம்.

“அமைதி, சுயக் கட்டுப்பாடு, தவம், தூய்மை, சகிப்புத்தன்மை, நேர்மை, அறிவு, பகுத்தறிவு, ஆத்திகம் ஆகியவை பிராமணரின் தன்மைகள்.” (பகவத் கீதை 18.42)

## சத்திரியரின் கடமைகள்

சமுதாய உடலின் கைகளாகக் கருதப்படும் சத்திரியர்களின் முக்கிய கடமை மக்களைப் பாதுகாப்பதாகும். காட்டு விலங்குகள், எதிரிகள், இயற்கை சீற்றங்கள் போன்றவற்றிலிருந்து இவர்கள் மக்களைக் காப்பர். மேலும், மக்கள் அனைவரும் தர்மத்தின்படி வாழ்கின்றனரா என்பதை உறுதி செய்ய வேண்டியதும் இவர்களின் கடமை. இவர்கள் அரசாங்கப் பணிக்காக மக்களிடம் வரி வசூலித்துக் கொள்ளலாம். நாட்டில் மக்கள் செய்கின்ற பாவங்களில் அரசர்களுக்கும் பங்கு உண்டு என்பதால், பிராமணர்களின் உதவியுடன் சமுதாயத்தில் தர்மம் தழைத்தோங்குவதற்கு இவர்கள் பாடுபடுவர். சத்திரியர்கள் ரஜோ குணத்தைச் சார்ந்தவர்கள்.

“சூரத்தனம், வலிமை, மனவுறுதி, வளமை, போரில் தைரியம், கொடை, ஆளும் தன்மை ஆகியவை சத்திரியர்களின் தன்மைகள்.” (பகவத் கீதை 18.43)

## வைசியர்களின் கடமைகள்

வைசியர்கள் சமுதாய உடலின் வயிற்றைப் போன்றவர்கள். விவசாயம், பசுக்களைப் பராமரித்தல், வியாபாரம் ஆகியவை இவர்களது முக்கியப் பணிகள் (பகவத் கீதை 18.44). சமுதாயத்திலுள்ள மற்ற மூன்று பிரிவினர்களுக்கும் இவர்களே பொருளாதார ஆதாரம். அரசாங்கத்திற்கு நிதியுதவி செய்வதும் தர்ம செயல்களைச் செய்வதும் இவர்களின் பணியாகும். வைசியர்கள் ரஜோ குணமும் தமோ குணமும் இணைந்த தன்மையுடையவர்கள்.

## சூத்திரர்களின் கடமைகள்

சமுதாயத்தின் கால்களாக வருபவர்கள் சூத்திரர்கள். இதர வர்ணத்தினருக்கு உடலால் உழைத்து உதவி செய்தல் இவர்களின் கடமையாகும். (பகவத் கீதை 18.44) சூத்திரர்கள் தமோ குணத்தைச் சார்ந்தவர்கள்.

## ஒருவரைக் காட்டிலும் மற்றவர் சிறந்தவரா?

ஓர் உடலுக்கு அனைத்து உறுப்புகளும் இன்றியமையாதவை. மூளை, கைகள், வயிறு, கால்கள் என அனைத்தும் வேண்டியவை. இதில் எந்தவொரு உறுப்பை இழப்பதற்கும் நாம் விரும்புவதில்லை. இருப்பினும், நடைமுறையில் பார்த்தால், மூளை சரியாக இருந்தால் மட்டுமே மற்ற உறுப்புகள் சரியாக இயங்க முடியும் என்பதால், “எண் சாண் உடம்புக்கு தலையே பிரதானம்” என்று கூறிடுவர். அதன்படி, முறையான பிராமணர்கள் சமுதாயத்தின் தலைவர்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதற்குத் தகுந்த மரியாதையைப் பெறுகின்றனர். பிராமணர்களின் கட்டளைகளுக்குக் கட்டுப்பட்டு ஆட்சி செய்யும் சத்திரியர்கள், அதற்கு அடுத்த நிலையில் மதிக்கப் படுகின்றனர். அவர்களைத் தொடர்ந்து, வைசியர்கள், சூத்திரர்கள் என அனை வரும் மதிக்கப்படுகின்றனர். தலை மட்டும் இருந்தால் போதும், மற்ற பாகங்கள் தேவையற்றவை என்று யாரும் கூறமாட்டார்கள்.

அனைவரும் சமம் என்று பெயரளவில் வாதிடக்கூடிய இன்றைய சமுதாயத்தில்கூட, ஒவ்வொருவரின் தகுதிக்கு ஏற்றாற்போல மதிப்பும் மரியாதையும் வேறுபடுகின்றன என்பதை நாம் காணலாம். நாட்டின் முக்கியஸ்தர்களான ஆட்சியாளர் களுக்கும் தொழிலதிபர்களுக்கும் அதிகமான மதிப்பு கொடுக்கப்படுவதை மறுக்க இயலாது. அனைவரும் சமம் என்றால், விஐபி என்று ஒரு பிரிவினர் எதற்காக? அவர்களுக்கு மட்டும் உயர்ந்த பாதுகாப்பு வசதிகள் எதற்காக? அனைவரும் சமம் என்ற பேச்சுகள், வெறும் மேடைப் பேச்சுகளே. தகுதிக்கும் திறமைக்கும் ஏற்றவாறு ஒருவர் மற்றவரை விட உயர்ந்தவராகவும் தாழ்ந்தவராகவும் அறியப்படுவது இயற்கையே.

பொதுவுடைமை பேசும் மக்களிடை யேயும் தலைவர்கள், பொறுப்பாளர்கள், தொண்டர்கள் என ஏற்றத்தாழ்வு நிலைகள் உண்டு. அறிவுள்ளவர்களே தலைவர்களாக வேண்டும். இல்லை என்றால் இயக்கம் காணாமல் போய்விடும். அதுபோன்று கடவுளை உணர்ந்த அறிவுடைய நபர்களே சமூகத் தினை வழிநடத்த வேண்டும்.

**அனைவரும் சமம் என்றால், விஐபி என்று ஒரு பிரிவினர் எதற்காக? அவர்களுக்கு மட்டும் உயர்ந்த பாதுகாப்பு வசதிகள் எதற்காக? அனைவரும் சமம் என்ற பேச்சுகள், வெறும் மேடைப் பேச்சுகளே.**

## பிறப்பினால் அனைவரும் சூத்திரர்களே

ஒருவர் எந்த வர்ணத்தில் அல்லது ஜாதிகளில் பிறக்கின்றாரோ, அவரும் அதே ஜாதிதான் என்று எங்கும் கூறப்படவில்லை—இதனை முன்னரே கண்டோம். பிறக்கும்போது அனைவரும் சூத்திரர்களே. ஜன்மனா ஜாயதே ஷுத்ர என்னும் வேத வாக்கியம் இதனைத் தெளிவாக்குகின்றது. பின்னர், ஸம்ஸ்காரத்தின் (சடங்குகளின்) மூலமாகவும், வேதக் கல்வியின் மூலமாகவும், பிரம்மனை உணர்வதாலும் ஒருவன் உயர்வு பெறுகிறான்.

பிராமண குலத்தில் பிறந்தவன் இறைவனைப் பற்றி அறியாமல், புலனின்பச் செயல்களில் மூழ்கியிருந்தால், அவன் நிச்சயமாக பிராமணன் அல்ல. பிறப்பினால் மட்டும் தன்னை பிராமணர் என்று ஒருவன் கூறிக் கொண்டால், அஃது அவரின் அறியாமையைக் காட்டுகிறது.

## வர்ணாஷ்ரமத்தின் குறிக்கோள்

இப்பிரிவுகளின் குறிக்கோள் ஒரு குறிப்பிட்ட மக்களைக் கீழ்நிலையில் வைப்பதோ, வேறு சிலரை உயர்நிலையில் வைப்பதோ அல்ல. இந்த வழிமுறை, சமுதாயத்திலுள்ள ஒவ்வொருவரையும் அவரவரது உண்மையான நிலையில் வைத்து, அந்நிலையிலிருந்து படிப்படியாக உயர்த்துவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒருவரோடு ஒருவர் இணைந்து ஒற்றுமையுடன் தத்தமது ஆன்மீக முன்னேற்றத்திற்கான செயல்களில் ஈடுபட வேண்டும்.



*அமெரிக்கர்கள், ஐரோப்பியர்கள், ஆப்பிரிக்கர்கள் என பலரும் ஹரி நாம சங்கீர்த்தனத்தினால் உயர்ந்த பிராமணர்களாக மாறி வருகின்றனர்.*

வர்ணாஷ்ரமத்தின் இறுதிக் குறிக்கோள் விஷ்ணுவைத் திருப்திப்படுத்துவதே. ஒவ்வொருவரும் தத்தமது கடமைகளைச் செய்தபடி, விஷ்ணுவை வழிபடுவதில் கவனம் செலுத்த வேண்டும். பகவான் விஷ்ணுவின் மீதான பற்றுதலை ஒருவன் வளர்த்துக் கொள்ளாவிடில், அவனுடைய செயல்கள் அனைத்தும் கால விரயமாகக் கருதப்படும். எனவே, வர்ணாஷ்ரமத்தின் குறிக்கோள் மக்களை வஞ்சிப்பதல்ல, உயர்த்துவதே.

## வர்ணாஷ்ரமம்—ஓர் ஆரிய கொள்கையா?

வர்ணாஷ்ரமம் என்பது ஆரியக் கொள்கை என்றும் தமிழ்நாட்டைச் சார்ந்ததல்ல என்றும் சிலர் கூறி வருகின்றனர். பெரும்பாலான மக்கள் தவறாகப் புரிந்து வைத்துள்ள கருத்துகளில் ஆரிய திராவிட கொள்கைகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. ஆரியன் என்பதை ஓர் இனமாகவே பெரும்பாலான மக்கள் நினைக்கின்றனர். ஆனால் உண்மையில், ஆரியர்கள் என்பது வாழ்வின் குறிக்கோளை உணர்ந்த, பண்பாடுடைய மக்களைக் குறிக்கும் சொல்லாகும். எனவே, ஆரியன் என்னும் சொல், உலகின் எந்தப் பகுதியிலுள்ள மனிதனுக்கும் பொருத்தமானதாக இருக்கலாம். வர்ணாஷ்ரம அமைப்பு அத்தகைய மனிதர்களுக்கு உரியதாகும். (விரைவில் இதுகுறித்த ஒரு கட்டுரையை பகவத் தரிசனத்தில் வாசகர்கள் எதிர்பார்க்கலாம்)

## யார் வேண்டுமானாலும் பிராமணராக முடியுமா?

தாழ்ந்த குடும்பத்தில் பிறந்தவர்கள் பிராமண நிலையை எட்ட முடியுமா என்று கேட்கலாம். நிச்சயமாக அடைய முடியும் என்பதே அதற்கான பதில். எமது இஸ்கான் இயக்கத்திலுள்ள பல்லாயிரக்கணக்கான வெளிநாட்டினர் இதற்கு சாட்சிகளாக உள்ளனர்.

*தீன-ஹீன ஜாத சிலோ, ஹரி நாமே உத்தாரிலோ,* ‘‘ஒருவன் மிகவும் தாழ்ந்தவனாக நீச்சமானவனாக இருந்தாலும் ஹரி நாமம் அவனை உயர்த்தும்,’’ என்பதை இன்று உலகெங்கிலும் நடைமுறையில் காண்கிறோம். ஒருகாலத்தில் சூத்திரர்களைவிட கீழ்நிலையில் உள்ளவர்கள் என்று ஒதுக்கப்பட்ட அமெரிக்கர்கள், ஐரோப்பியர்கள், ஆப்பிரிக்கர்கள் என பலரும் அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் மூலமாக இன்று ஹரி நாமத்தை உச்சரித்து, உயர்ந்த தகுதிகளைப் பெற்று, தலைசிறந்த பிராமணர்களாக இருப்பதைக் கண்கூடாகக் காணலாம்.

எனவே, யார் வேண்டுமானாலும் பிராமணராகலாம்; அதற்கான தகுதிகள் இருந்தால் போதும். உண்மையில், வழிதவறி சீர்கெட்டுச் சென்று கொண்டிருக்கும் இன்றைய சமுதாயத்தினை முறையாக வழிநடத்துவதற்குப் பக்குவமான பிராமணர்கள் அவசியம் தேவை.

இருப்பினும், பிராமண நிலையை எட்டினால் சமுதாயத்தில் மதிக்கப்படுவோம் என்ற காரணத்திற்காக,

ஒருவன் பிராமணனாக மாறுவதற்கு முயற்சி செய்தால், அகங்காரத்தினால் மேற்கொள்ளப்படும் அத்தகு முயற்சி ஏற்கத் தக்கதல்ல. அவன் ஒருவித மரியாதையை எதிர்பார்ப்பதால், பிராமணனாக மாறுவதற்கான தகுதியை இழந்துவிடுகிறான். ஏனெனில், பிராமணனின் தன்மை பணிவுடன் செயல்படுவதே. சத்திரியராகப் பிறந்த விஸ்வாமித்ரர் போட்டி மனப்பான்மையின் காரணத்தினால் பிராமணராக வேண்டும் என்று முயற்சி செய்ததையும், அவர் தனது கர்வத்தை விட்டொழித்த பிறகே பிராமணராக ஏற்றுக்கொள்ளப்பட்டார் என்பதையும் புராணங்களில் காண்கிறோம்.

## கலி யுகத்தின் ஜாதி முறை

கலி யுகத்தின் தாக்கத்தினால் உலகிலுள்ள பல்வேறு நிலைகள் மாறியிருப்பதுபோல, முறையான தூய்மையான வர்ணாஷ்ரம முறையும் சிதைந்துவிட்டது. பண்பற்ற உயர்வகுப்பினர் மற்றவர்களை வஞ்சிக்கத் தொடங்கியதால், சூழ்நிலை சீர்குலையத் தொடங்கியது என்று கூறலாம். வர்ணாஷ்ரமம் என்பது பிறப்பின் அடிப்படையில் அல்ல, தகுதியின் அடிப்படையில் என்று கூவிக் கூவிக் கூறினாலும், பிறப்பின் அடிப்படையிலான ஜாதி உணர்வுகள் மக்களின் மனதில் ஆழப் பதிந்துள்ளன. இத்தகைய ஜாதி உணர்வுகளை போக்குவதற்கு யாரும் உண்மையான முயற்சி மேற்கொள்வதில்லை. ஜாதிகளை எதிர்ப்பவர்களாகவும் ஜாதிகளைப் பரப்பும் பகவத் கீதையை எதிர்ப்பவர்களாகவும் கூறிக்கொள்பவர்கள்கூட, ஜாதியின் அடிப்படையில் செயல்பட்டு வருகின்றனர் என்பதை யாவரும் அறிவர்.

**கீதை, நாம் இந்த உடலே அல்ல என்றும், ஜீவன்கள் என்றும், கிருஷ்ணரின் நித்திய சேவகர்கள் என்றும் கற்றுத் தருகின்றது. உடலே அல்ல என்னும்போது, ஜாதி எங்கிருந்து வந்தது?**

பெயரளவில் உயர்குடியில் பிறந்தவர்களும் தங்களது பண்பாட்டை விட்டுவிட்டு, மது, மாது, மாமிசம் என்று அலைவதை இன்று கண்கூடாகக் காண்கிறோம். எனவே, சுருக்கமாகச் சொன்னால், தற்போதைய ஜாதி முறை வர்ணாஷ்ரம அமைப்பிலிருந்து முற்றிலுமாக விலகிவிட்டது என்று சொல்லலாம். இதனால்தான், *கலௌ ஷூத்ர ஸம்பவ*, கலி யுகத்தில் இருப்பவர்கள் அனைவரும் சூத்திரர்களே என்று கூறப்படுகிறது.

மக்களின் இறுதி நன்மையைக் கருத்தில் கொண்டு, முறையான, பக்குவமான வர்ணாஷ்ரம தர்மத்தினை சமுதாயத்தில் நிலைநாட்ட வேண்டும் என்று இஸ்கான் இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியரான தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் விரும்பினார். சமுதாயத்தை சீர்திருத்துவதற்குப் பக்குவமான பிராமணர்களே முதல் தேவை என்பதால், அத்தகு பிராமணர்களை உருவாக்குவதற்கு ஸ்ரீல பிரபுபாதர் முக்கியத்துவம் கொடுத்தார். உலகின் பல்வேறு பகுதிகளில், பல்வேறு பின்னனிகளைக் கொண்ட மக்களையும் தமது சீடர்களாக ஏற்று, அவர்களுக்கு பிராமண தீட்சை கொடுத்து, பூணூல் அணிவித்து, முறையான பிராமணத் தன்மைகளைக் கற்றுக் கொடுத்து, மிகவுயர்ந்த வைஷ்ணவர்களாக மாற்றும் திருப்பணியினை அவர் மேற்கொண்டார். அதனைப் பின்தொடர்ந்து, முறையான வர்ணாஷ்ரமத்தை வடிவமைக்க அவரது சீடர்கள் தொடர்ந்து முயற்சி செய்து வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## பகவத் கீதையின் அறிவுரை

வர்ணாஷ்ரமம் கீதையில் எடுத்துரைக்கப்பட்டுள்ள போதிலும், கீதையின் குறிக்கோள் மக்களை ஜாதியில் மூழ்கடிப்ப தல்ல. ஒவ்வொருவரும் கிருஷ்ண பக்தியில் ஈடுபட வேண்டும் என்பதே கீதையின் குறிக்கோள். கிருஷ்ண பக்தியில் ஈடுபடுவதற்கு எந்தவொரு தகுதியும் அவசியமில்லை. புத்திசாலி பிராமணராக இருக்க வேண்டும் என்பதோ, திறமை வாய்ந்த சத்திரியனாக இருக்க வேண்டும் என்பதோ அவசியமில்லை. தத்தமது தகுதிக்கு ஏற்றபடி கிருஷ்ணரை வழிபட்டு, எல்லாரும் உயர்ந்த பக்குவநிலையை அடைய முடியும். வைசியர்கள், சூத்திரர்கள், பெண்கள் என யாராக இருந்தாலும், பரம கதியை அடையலாம் என்பதை கிருஷ்ணர் கீதையில் (9.32) உறுதி செய்கிறார்.

கீதை, நாம் இந்த உடலே அல்ல என்றும், ஜீவன்கள் என்றும், கிருஷ்ணரின் நித்திய சேவகர்கள் என்றும் கற்றுத் தருகின்றது. உடலே அல்ல என்னும்போது, ஜாதி எங்கிருந்து வந்தது? கீதையின் குறிக்கோள் வர்ணாஷ்ரமத்தில் பற்று கொள்வதல்ல, பகவான் ஸ்ரீ கிருஷ்ணரிடம் பற்று கொள்வதே.

மேலும், ஜடவுலகிலுள்ள உயர்நிலை, தாழ்நிலை என இரண்டுமே தற்காலிகமானவை என்பதையும் கீதை நமக்கு எடுத்துரைக்கின்றது. பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என எந்த நிலையில் இருந்தாலும், அவையனைத்தும் தற்காலிகமானவை. தற்காலிக விஷயங்களில் பற்றுதல் கொண்டு நேரத்தை விரயம் செய்வது கூடாது.

எந்த வர்ணத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் கிருஷ்ண பக்தியில் ஈடுபட்டு தங்களையும் மற்றவர்களையும் மேம்படுத்த வேண்டும். கலி யுக தர்மமான ஹரே கிருஷ்ண மஹா மந்திரத்தினை உச்சரிப்பதன் மூலம், சமுதாயத்திலுள்ள அனைவரும் கிருஷ்ண உணர்விற்கு ஏற்றம் பெற இயலும் என்பதே முடிவு.

ஆழ்ந்து யோசிக்காமல், பகவத் கீதையை முறையாகக் கற்காமல், ஏதோ உள்நோக்கத்துடன் செயல்படும் நபர்கள் மட்டுமே பகவத் கீதை ஜாதியைப் பரப்புகின்றது என்ற குற்றச்சாட்டினை முன்வைப்பர் என்பதை வாசகர்கள் புரிந்து கொண்டிருப்பார்கள் என்று நம்புகிறோம். இதுகுறித்த கருத்துகளும் கேள்விகளும் வரவேற்கப்படுகின்றன.

# எங்களை சோதித்துப் பாருங்கள்

1969, செப்டம்பர் 11 அன்று தெய்வத்திரு அ.ச.பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் இலண்டன் நகருக்கு வருகை புரிந்தபோது, அவரைச் சூழ்ந்து கொண்டு நிருபர்கள் கேட்ட கேள்விகளும் அவரளித்த பதில்களும்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** இதுபோன்ற பிரம்மாண்டமான வரவேற்பை நான் விரும்புவதில்லை. இருப்பினும் எங்களது இயக்கத்திற்கு மக்கள் எவ்வளவு ஆதரவு தருகிறார்கள் என்பதை அறிந்துகொள்வதில் ஆர்வம் கொண்டுள்ளேன்.

**நிருபர்:** இங்கிலாந்திற்கு இதற்கு முன்பு வந்துள்ளீர்களா?

**ஸ்ரீல பிரபுபாதர்:** தற்போது நான் இங்கிலாந்துக்கு இரண்டாவது முறையாக வருகிறேன். 1967இல் இந்தியாவிற்குச் செல்லும் வழியில் இரண்டு நாள்கள் மட்டும் தங்கியிருந்தேன். எனவே, உண்மையில் இதுவே முதல்முறை.

**நிருபர்:** எத்தனை நாள்களுக்கு இங்கு இருப்பீர்கள்?

**ஸ்ரீல பிரபுபாதர்:** அஃது எனக்கு தெரியாது. என்னைப் பேணிக் காப்பதற்கு இங்கு ஏராளமான தாய்மார்களும் தந்தையர்களும் உள்ளனர். அவர்கள் என்னை எத்தனை காலம் இருக்கச் சொல்வார்களோ, அத்தனை காலம் இங்கிருப்பேன்.

**நிருபர்:** இங்கு வழங்கப்பட்ட பிரம்மாண்டமான வரவேற்பு, தங்களுக்கு அளிக்கப்பட்ட மிகச்சிறந்த வரவேற்பா அல்லது எல்லா இடங்களிலும் நடைபெறும் நிகழ்ச்சியா?

**ஸ்ரீல பிரபுபாதர்:** நான் எங்கு சென்றாலும், அங்கு எனக்குப் பல்வேறு சீடர்கள் உள்ளனர். மேற்கத்திய நாடுகளில், குறிப்பாக அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளில் எங்களுக்கு ஏறக்குறைய இருபது கோவில்கள் உள்ளன. அங்குள்ள அமெரிக்க சீடர்கள் மிகுந்த உற்சாகத்துடன் செயல்படுகின்றனர். லாஸ் ஏஞ்சல்ஸ், சான்பிரான்சிஸ்கோ ஆகிய இடங்களில் எனக்கு மிகவும் பிரம்மாண்டமான வரவேற்புகள் அளிக்கப்பட்டன. அங்கு நடைபெற்ற ரதயாத்திரை உற்சவத்தில் ஏறக்குறைய பத்தாயிரம் இளைஞர்கள் பங்கேற்றனர், அவர்கள் என்னுடன் ஏழு மைல் தூரம் தொடர்ந்து நடந்து வந்தனர்.

**நிருபர்:** தாங்கள் எதை கற்றுத்தர முயற்சி செய்கிறீர்கள்?



**ஸ்ரீல பிரபுபாதர்:** நீங்கள் மறந்துபோன உண்மையைக் கற்றுத்தர முயற்சி செய்கிறேன்.

**நிருபர்:** அந்த உண்மை எது?

**ஸ்ரீல பிரபுபாதர்:** கடவுள். உங்களில் சிலர் கடவுள் இல்லை என்றும், சிலர் அவர் காலமாகிவிட்டார் என்றும், சிலர் அவருக்கு உருவம் இல்லை என்றும் கூறி வருகிறீர்கள். இவையனைத்தும் முட்டாள்தனம். இந்த பேதமையைக் களைந்து கடவுள் உண்டு என்ற உண்மையை போதிக்கவே நான் விரும்புகிறேன். அதுவே எனது குறிக்கோள். எந்தவொரு மூடனும் என்னை அணுகலாம், அவனிடம் கடவுள் இருப்பதை நான் நிரூபிப்பேன். இதுவே எமது கிருஷ்ண பக்தி இயக்கம். நாத்திகவாதிகளுக்கு நான் சவால் விடுக்கின்றேன். கடவுள் இருப்பது நிச்சயம். நாம் இங்கு நேருக்குநேர்

அமர்ந்திருப்பதைப் போல, உங்களால் கடவுளை நேராகக் காண முடியும். நீங்கள் நேர்மையாகவும் தீவிரமாகவும் முயற்சித்தால், நிச்சயம் அது சாத்தியமாகும். துரதிர்ஷ்டவசமாக, மக்கள் கடவுளை மறக்க முயற்சிக்கின்றனர். அதனால்தான் வாழ்வில் பலவிதமான கஷ்டங்களும் இடையூறுகளும் வருகின்றன. ஆகவே, நீங்கள் கிருஷ்ண உணர்வுடன் மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்று நான் பிரச்சாரம் செய்கிறேன். நிலையற்ற வாழ்வு என்னும் மாயையின் அலைகளால் முட்டாள்தனமாக அடித்துச் செல்லப்பட்டு விடாதீர்கள்! இதுவே எனது பணிவான வேண்டுகோள்.

**நிருபர்:** உங்களுடைய இயக்கத்தில் இருப்பவர்கள் கீர்த்தனங் களைப் பாடி ஆடுவது அவசியமா?

**ஸ்ரீல பிரபுபாதர்:** கீர்த்தனங்களில் கலந்துகொண்டு பாடுதல் என்பது பன்னெடுங்காலமாக நம் மனதில் படிந்துள்ள களங்கங்களைத் தூய்மை செய்யும் முறையாகும். கடவுளுடனான நமது தொடர்பு நிரந்தரமானது, அதனைத் துண்டித்துவிட முடியாது. ஆனால் தற்போது மாயையின் தொடர்பினால் நாம் அவரை மறக்க முயல்கிறோம். இருப்பினும், ஹரே கிருஷ்ண மஹா மந்திரத்தை நீங்கள் உச்சரிக்கத் தொடங்கினால், மாயையின் செயல் நின்று போகும்; கடவுளுடனான உறவை வெகு விரைவில் நீங்கள் புரிந்துகொள்வீர்கள். *சேதோ தர்பன மார்ஜனம்.* களங்கங்கள் நிறைந்த மனதை தூய்மைசெய்வதே சங்கீர்த்தனத்தின் பயன்.

*ந மாம் துஷ்க்ருதினோ மூடா: ப்ரபத்யந்தே நராதமா* என்று பகவத் கீதையில் (7.15) கூறப்பட்டுள்ளது. அறிவற்ற மூடர்களும், மனிதரில் கடைநிலையோரும், மாயையால் அறிவு கவரப்பட்டவர்களும், அசுரரின் நாத்திகத் தன்மையை ஏற்றவர்களுமான துஷ்டர்கள் கடவுளைப் பற்றி அறிவதில்லை. கேள்வியுடையோரும் அறிவாளிகளும் கடவுளை அறிந்துகொள்ள முயற்சி செய்கின்றனர்; அவர்களால் கடவுளை அறிந்துகொள்ள முடியும். ஆகவே நான் தங்களிடம் வேண்டுவது யாதெனில், இந்த கிருஷ்ண பக்தி இயக்கத்தைப் புரிந்துகொள்ள முயற்சி செய்யுங்கள். இது போலியான இயக்கம் அல்ல, மாறாக விஞ்ஞானபூர்வமான அதிகாரபூர்வமான இயக்கமாகும். விஞ்ஞானி, தத்துவஞானி, தர்க்கத்தில் வல்லுனர் என யார் வேண்டுமானாலும் எங்களை அணுகலாம். கடவுள் உள்ளார் என்பதையும் அவருக்கும் நமக்கும் நிரந்தர உறவு உண்டு என்பதையும் நாங்கள் அவர்களுக்கு நிரூபிப்போம்.

நீங்கள் மகிழ்ச்சியாக வாழ விரும்பி னால், எங்கள் கிருஷ்ண பக்தி இயக்கத்தை ஏற்றுக்கொள்வது அவசியம். இல்லையேல் மனித இனம் வீணாகிவிடும். *ஹராவபக்தஸ்ய குதோ மஹத்-குணா* (ஸ்ரீமத் பாகவதம் 5.18.12). ஒருவன் கடவுள் உணர்வற்று இருந்தால், அவன் எதற்கும் தகுதியற்றவனாக கருதப்படுகிறான். அவன் பட்டப்படிப்புகளைப் பெற்று கல்வித் தகுதியில் உயர்ந்த நிலையில் இருந்தாலும், அவன் தகுதியற்றவனாகவே கருதப்படுவான். *மனோரதேன அஸதோ தாவதோ பஹி:.* மனக் கற்பனையில் இருப்பதே அவனது தகுதி. வேறு தகுதிகள் எதுவும் அவனிடம் இல்லை. அவர்களின் அபத்தங்கள் அனைத்தையும் நாங்கள் ஒதுக்கிவிடுவோம். இறைவனின் தொண்டில் தங்களது வாழ்வை அர்ப்பணிக்க ஆர்வம் கொண்டுள்ள நல்லோர்களை நாங்கள் ஏற்றுக்கொள்வோம். கிருஷ்ண பக்தியில் இருப்பவர்கள் சாதாரண நபர்களல்ல. என்னைப் பின்பற்றும் இந்த மாணவ மாணவியர்கள் அனைவரும் மிகவுயர்ந்த ஆன்மீக நிலையில் உள்ளனர். அவர்கள் சாதாரணமான மாணவ மாணவியர் அல்லர். மிகவுயர்ந்த கல்வி கற்ற பௌதிகவாதியைக் காட்டிலும் இம்மாணவர்களின் குணம் மிகவும் சிறப்பானதாக உள்ளது. *யஸ்யாஸ்தி பக்திர் பகவத்யகிஞ்சன ஸர்வைர் குணைஸ் தத்ர ஸமாஸதே ஸுரா:* எவரொருவர் கடவுள் உணர்வையும், கடவுள்மீதான அன்பையும் விருத்தி செய்துகொள்கிறாரோ, அவருக்கு எல்லா நற்குணங்களும் தானாகவே உருவாகிப் பெருகும். எல்லா நற்குணங்களும் நிச்சயம் வளரும்! எங்களது பக்தர்களை சோதித்துப் பாருங்கள். அவர்கள் எந்த அளவிற்கு நல்லவர்களாக, முன்னேறியவர்களாக உள்ளனர் என்பதை நீங்களே பாருங்கள். உலகிலுள்ள யாரை வேண்டுமானாலும் அழைத்து, எங்களில் யாரை வேண்டுமானாலும் சோதித்துப் பாருங்கள். அவர்களது நடத்தை, எண்ணங்கள், மற்றும் உணர்வுகளில் எவ்வளவு வேறுபாடு உள்ளது என்பதை



*கீர்த்தனங்களில் கலந்துகொண்டு பாடுதல் என்பது பன்னெடுங்காலமாக நம் மனதில் படிந்துள்ள களங்கங்களைத் தூய்மை செய்யும் முறையாகும்.*

**நாம் கிறிஸ்துவர்களும் அல்ல, இந்துக்களும் அல்ல, இஸ்லாமியர்களும் அல்ல. நாம் அனைவரும் கடவுளின் சேவகர்கள். மக்கள் கடவுளின் சேவகர்களாக இருந்தால், அவர்களுக்கு மத்தியில் மாற்றுக் கருத்துகள் உருவாகாது, கலவரங்கள் இருக்காது.**

நீங்களே உணர்வீர்கள். எனவே, நீங்கள் அமைதியான சமுதாயத்தை விரும்பினால், சமுதாயத்திலுள்ள மக்களை கிருஷ்ண உணர்வுடையவர்களாக மாற்ற வேண்டும், மற்றவை அனைத்தும் தானாக சரியாகிவிடும். இதுவே தீர்வு, ஐக்கிய நாடுகள் சபையினால் உங்களுக்கு தீர்வு கொடுக்க முடியாது.

**நிருபர்:** நம்மைச் சுற்றி நடைபெறும் சில விஷயங்கள் குறித்து நான் சில கேள்விகள் கேட்கலாமா? உதாரணமாக, மனிதன் நிலவிற்குச் செல்வது குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

**ஸ்ரீல பிரபுபாதர்:** இது காலத்தை வீணடிக்கும் செயல். நான் சான்பிரான்சிஸ்கோவில் இருந்தபோது இதனை ஏற்கனவே தெரிவித்துவிட்டேன். அங்கிருந்த நிருபர்கள் என்னிடம் இதே கேள்வியைக் கேட்டனர். நிலவிற்குச் செல்வதற்கான இம்முயற்சி காலத்தையும் பணத்தையும் வீணடிக்கும் செயல் என்று தெள்ளத்தெளிவாக தயக்கமின்றி பதில் கூறினேன். அதையே மீண்டும் கூறுகிறேன்—இம்முயற்சிகள் காலத்தையும் பணத்தையும் வீணடிப்பதே.

**நிருபர்:** இந்நாட்டில் நடைபெறும் உள்நாட்டுக் கலவரங்கள், போர் போன்றவற்றைப் பற்றி தங்களின் கருத்து என்ன? கிறிஸ்துவர்களுக்கு மத்தியில் நடக்கும் கலவரங்கள் குறித்து என்ன சொல்கிறீர்கள்?

**ஸ்ரீல பிரபுபாதர்:** நாம் கிறிஸ்துவர்களும் அல்ல, இந்துக்களும் அல்ல, இஸ்லாமியர்களும் அல்ல. நாம் அனைவரும் கடவுளின் சேவகர்கள். மக்கள் கடவுளின் சேவகர்களாக இருந்தால், அவர்களுக்கு மத்தியில் மாற்றுக் கருத்துகள் உருவாகாது, கலவரங்கள் இருக்காது. ஆனால், அவர்கள் மாயையின் பிடியில் சிக்கி நிலையற்ற உலகில் மாயைக்கு சேவை செய்து கொண்டிருந்தால், நிச்சயம் அவர்களுக்கு இடையில் மாற்று கருத்துகள் இருக்கும். *ஸ வை பும்ஸாம் பரோ தர்மோ யதோ பக்திர் அதோக்ஷஜே.* (ஸ்ரீமத் பாகவதம் 1.2.6) கடவுளிடம் உன்னதமான அன்பை வளர்ப்பதற்கான வழிமுறையை எந்தவொரு மதம் கற்றுத் தருகின்றதோ, அதுவே முதல் தரமான மதம். இதுவே மதத்தை சோதிப்பதற்கான முறை. ஒருவர் கிறிஸ்தவரா, முகமதியரா, இந்துவா என்பது முக்கியமல்ல. அவர் கடவுளிடம் அன்பு செலுத்த கற்றறிந்தால் மட்டுமே அவரது மதம் முழுமையானது, இல்லாவிடில் பயனில்லை.

**நிருபர்:** அயர்லாந்து போன்ற இடங்களுக்குச் சென்று, அங்குள்ள மக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி, சண்டையை நிறுத்துவதற்கு நீங்கள் ஏன் முயற்சி செய்யக் கூடாது?

**ஸ்ரீல பிரபுபாதர்:** முதல் தரமான மதம் என்பது கடவுளிடம் அன்பு செலுத்துவது எப்படி என்பதை போதிப்பதே. நாங்கள் அதைக் கற்றுத் தருகிறோம். இதைப் புரிந்துகொள்ள முயற்சி செய்யுங்கள். நீங்கள் கிருஸ்துவராக இருந்து, கடவுளின் மீதான அன்பை நீங்கள் வளர்த்துக் கொண்டால், அப்போது நீங்கள் பக்குவமானவர், உங்கள் மதமும் பக்குவமானது. ஆனால் கடவுளை நேசிப்பதற்குப் பதிலாக ஒரு நாயிடம் அன்பு செலுத்துவதை நீங்கள் வளர்த்துக் கொண்டால், உங்களுடைய மொத்த காலமும் வீண்தான்.

**நிருபர்:** தங்களுடைய வயது எத்தனை என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** எழுபத்து நான்கு. 1896இல் பிறந்தேன்.

**நிருபர்:** எந்த இடத்தில்?

**ஸ்ரீல பிரபுபாதர்:** இந்தியாவிலுள்ள கல்கத்தாவில்.

**நிருபர்:** தாங்கள் திருமணமானவரா?

**ஸ்ரீல பிரபுபாதர்:** ஆம். எனது மனைவி, மகன்கள், பேரப்பிள்ளைகள் என அனைவரும் உயிருடன் உள்ளனர். ஆனால் எனக்கும் அவர்களுக்கும் தற்போது எந்தத் தொடர்பும் இல்லை. நான் துறவறத்தை அனுஷ்டிக்கும் சந்நியாசி.

**நிருபர்:** உங்கள் குடும்பத்தாருடன் நீங்கள் தொடர்பில் இல்லையா?

**ஸ்ரீல பிரபுபாதர்:** ஆம். தொடர்பு கிடையாது.

**நிருபர்:** ஏன்?

**ஸ்ரீல பிரபுபாதர்:** ஏனெனில், நான் துறவு வாழ்வை மேற்கொண்டுள்ளேன். நான் எனது வாழ்வை பகவான் கிருஷ்ணருக்காக அர்ப்பணித்துள்ளேன். இதுவே வேத பாரம்பரியம். உங்களுடைய வாழ்வில் ஒரு குறிப்பிட்ட பகுதியை நீங்கள் கடவுளுக்காக முற்றிலும் அர்ப்பணிக்க வேண்டும். அதுவே சந்நியாசம் எனப்படுகிறது.

**நிருபர்:** இதைச் செய்வதற்காக நீங்கள் விவாகரத்து பெற்றிருக்கிறீர்களா?

**ஸ்ரீல பிரபுபாதர்:** இல்லை, விவாகரத்து என்ற கேள்விக்கே இடமில்லை. விவாகரத்து என்றால் என்ன என்பது எங்களுக்குத் தெரியாது. எங்கள் நாட்டில், குறைந்தபட்சம் இந்து சட்டத்தில் விவாகரத்து என்பது இல்லை. கணவனும் மனைவியும் ஒருமுறை இணைந்துவிட்டால், அதுவே வாழ்க்கை. எந்தச் சூழ்நிலையிலும் அவர்களின் பிரிவிற்கு இடமில்லை. இன்பமோ துன்பமோ—எந்த நிலையிலும் பிரிவு என்ற பேச்சுக்கே இடமில்லை. தற்கால அரசியல்வாதிகள் விவாகரத்து சட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளனர். ஆனால் இந்து மதம், மற்றும் மனு சம்ஹிதையின்படி விவாகரத்து என்பது கிடையாது.

**நிருபர்:** நீங்கள் உங்களது குடும்பத்தை எப்போது துறந்தீர்கள்?

**ஸ்ரீல பிரபுபாதர்:** 1959இல்.

**நிருபர்:** நீங்கள் உங்கள் குடும்பத்தினரை அதன் பின்னர் பார்த்தது உண்டா?

**ஸ்ரீல பிரபுபாதர்:** இல்லை. நான் அவர்களைச் சந்திக்க இயலாது. குறைந்தபட்சம் என் மனைவியைப் பார்க்கக் கூடாது. எனது மகன்களும் மகள்களும் என்னைப் பார்க்க வருவார்களேயானால், நான் அவர்களைச் சந்திக்கலாம். ஆனால் என் மனைவி என்னைக் காண முடியாது. அதுவே சந்நியாச வாழ்வின் முறை. ஒரு சந்நியாசி தன் மனைவியை மறுபடியும் சந்திக்கக் கூடாது. துறவறத்தின் பொருள் பெண்களுடனான தொடர்பை முற்றிலும் கைவிடுவதே. மிக்க நன்றி.

( தமிழாக்கம்: ராஜேந்திரன் )

---

## ஜீ தொலைக்காட்சியில் பகவத் கீதை சொற்பொழிவு

இஸ்கான் சென்னையின் மூத்த பக்தர்களில் ஒருவரான திரு. ஸ்ரீதர் ஷியாம தாஸ் அவர்கள், தற்போது ஜீ தமிழ் தொலைக்காட்சியில், திங்கள் முதல் வெள்ளி வரை தமிழில் பகவத் கீதை சொற்பொழிவு வழங்கி வருகிறார். நேரம்: மாலை 5:30 மணி. கோவில்களுக்கும் சத்சங்கத்திற்கும் வரவியலாத அன்பர்களுக்கு இந்த தொலைக்காட்சி நிகழ்ச்சி மிக்க உதவியாக அமையும் என்று நம்புகிறோம். தொடர்ந்து கேட்டு பயன் பெறுங்கள்.

## சந்தாதாரர்களின் கவனத்திற்கு...

தங்களது ரசீதில் இருக்கும் எண், தங்களுடைய அடையாள எண்ணாகும். தங்களது குறைகளைத் தெரிவிக்கவோ, முகவரி மாற்றத்தைத் தெரிவிக்கவோ, தாங்கள் எமது சந்தா அலுவலகத்தைத் தொடர்புகொள்ளும்போது, தங்களது அடையாள எண்ணைக் குறிப்பிடுதல் அவசியம். தங்களுக்கு அனுப்பப்படும் பிரதியில் இருக்கும் முகவரியின் வலது மேற்பகுதியில் தங்களது அடையாள எண்ணும், வலது கீழ்ப்பகுதியில் தங்களது சந்தா முடிவுறும் மாதமும் கொடுக்கப்பட்டுள்ளன. பிரதி மாதம் 12ஆம் தேதிக்குள் புத்தகம் தங்களை வந்து சேரவில்லையெனில், உடனடியாகத் தவறாமல் எமது சந்தா அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

சந்தா முடிவதற்கு முன்பு, அதனைப் புதுப்பித்து தங்களது ஆன்மீக வாழ்விற்கான இணையற்ற வழிகாட்டியினை தொடர்ந்து பெறும்படி கேட்டுக் கொள்கிறோம்.

### இப்பத்திரிகையின் குறிக்கோள்

• உண்மை, போலி; ஆன்மீகம், பௌதிகம்; நிரந்தரமானவை, தற்காலிகமானவை—ஆகியவற்றைப் பிரித்துப் பார்க்கும் அறிவொளியை மக்களுக்கு வழங்குதல் • ஜட வாழ்வின் தவறுகளை பகிரங்கப்படுத்துதல் • ஆன்மீக வாழ்வின் வேத நுணுக்கங்களில் மக்களை வழிகாட்டுதல் • வேதப் பண்பாட்டைப் பாதுகாத்து அதனைப் பரப்புதல் • பகவான் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவினால் வழங்கப்பட்ட இறைவனின் திருநாம உச்சாடனத்தைப் பரப்புதல் • முழுமுதற் கடவுளான ஸ்ரீ கிருஷ்ணரை நினைப்பதற்கும் அவருக்குத் தொண்டு செய்வதற்கும் உதவி செய்தல்




தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் அருளிய "பகவத் கீதை உண்மையுருவில்," 56 மொழிகளில், சுமார் 7 கோடி பிரதிகளாக உலக மக்களின் கரங்களில் பவனி வந்துள்ளது. உலகெங்கிலும் ஆயிரக்கணக்கான பக்தர்களை உருவாக்கிய தனிச்சிறப்பினை **பகவத் கீதை உண்மையுருவில்** பெற்றுள்ளது. ஸ்ரீல பிரபுபாதரால் அருளப்பட்ட அப்புத்தகத்தினை அனைவரும் நன்கு படித்துப் பயன்பெற உதவும் ஒரு சிறு முயற்சியே இந்தக் கண்ணோட்டம்.

இந்த நீண்ட கண்ணோட்டத்தின் பூரண பலனை அனுபவிக்க வேண்டுமெனில், ஸ்ரீல பிரபுபாதரின் பகவத் கீதையை இத்துடன் இணைத்து கவனமாக படிக்க வேண்டியது மிகவும் அவசியம். **பகவத் கீதை உண்மையுருவில்** நூலிற்காக ஸ்ரீல பிரபுபாதர் வழங்கிய அறிமுகத்தினையும் பதினொன்று அத்தியாயங்களையும் சென்ற இதழ்களில் கண்டோம். இந்த இதழில் **பன்னிரண்டாம் அத்தியாயத்தையும்** இனிவரும் இதழ்களில் இதர அத்தியாயங்களையும் காணலாம்.

# பக்தித் தொண்டு

## பதினொன்றாம் அத்தியாயத்தின் சுருக்கம்

கிருஷ்ணரின் அழிவற்ற பெருமைகளைக் கேட்ட அர்ஜுனன் அவற்றினால் பூரண தெளிவு பெற்றான். இருப்பினும், பிற்காலத்தில் வரக்கூடிய மக்களின் நன்மையைக் கருத்தில் கொண்டு, கிருஷ்ணர் பத்தாம் அத்தியாயத்தில் தமது பெருமைகளாகப் பட்டியலிட்டவை அனைத்தையும் அவரது விஸ்வரூபத்தில் நேரில் காண விருப்பம் தெரிவித்தான். அர்ஜுனனின் விருப்பத்தை ஏற்று, அவன் காண விரும்பியவை மட்டுமின்றி, வருங்காலத்தில் காண விரும்புபவற்றையும் தனது விஸ்வரூபத்தில் காட்டுகின்றேன் என்று கூறி, அவனுக்கு தெய்வீகக் கண்களை கொடுத்த பின்னர், கிருஷ்ணர் தனது விஸ்வரூபத்தைக் காட்டினார். விஸ்வரூபத்தில் எண்ணற்ற கண்கள், கால்கள், கைகள் என அற்புதமான தரிசனத்தினை அர்ஜுனன் பெற்றான். பல்வேறு தேவர்களையும் உயிரினங்களையும் கண்டான். ஆச்சரியத்தில் மூழ்கித் தனது பிரார்த்தனையை முன்வைத்த அர்ஜுனன் படிப்படியாக பயம் கொண்டான். தான் காலம் என்றும் அனைவரையும் அழிக்க வந்திருப்பதாகவும் கிருஷ்ணர் விளக்கிய பின்னர், அவரது நான்கு கரங்களைக் கொண்ட நாராயண ரூபத்தைக் காட்டும்படி அர்ஜுனன் வேண்ட, அதன்படி கிருஷ்ணர் தனது நாராயண ரூபத்தைக் காட்டி, பின்னர் தனது மூல ரூபமான கிருஷ்ண ரூபத்திற்கு மாறினார். பிறழாத பக்தியினால் மட்டுமே தன்னை கிருஷ்ணராகக் காண முடியும் என்று பக்தியின் மகத்துவத்தைக் கூறியபடி கிருஷ்ணர் பதினொன்றாம் அத்தியாயத்தினை நிறைவு செய்தார்.

## அர்ஜுனனின் கேள்வி

பன்னிரண்டாம் அத்தியாயம் "பக்தி யோகம்" என்று தலைப்பிடப்பட்டுள்ளது. கீதையின் அனைத்து அத்தியாயங்களிலும் (அதிலும் குறிப்பாக ஏழாம் அத்தியாயத்திலிருந்து பன்னிரண்டாம் அத்தியாயம் வரை) பக்தி யோகமே பிரதானமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இருப்பினும், இந்த பன்னிரண்டாம் அத்தியாயத்தில், பக்தி யோகமானது அருவப் பிரம்மனை மையமாகக் கொண்ட இதர யோகப் பயிற்சிகளைக் காட்டிலும் உயர்ந்தது என்பது தெள்ளத் தெளிவாக கிருஷ்ணரால் விளக்கப் படுவதால், இந்த அத்தியாயம் அவ்வாறே பெயர் பெற்றுள்ளது.

விஸ்வரூபத்தைப் பற்றிய விளக்கங்களைக் கேட்கும் ஆன்மீக அன்பர்கள், அந்த விஸ்வரூபமே மிகமிக உயர்ந்தது என்று தவறாகப் புரிந்துகொள்ளக் கூடாது

என்பதற்காகவும், அருவப் பிரம்மனை அணுகுவதைக்காட்டிலும் கிருஷ்ணரை வழிபடுதல் உயர்ந்தது என்பதை கிருஷ்ணரின் திருவாயிலிருந்து பெறுவதற்காகவும், அர்ஜுனன் கிருஷ்ணரிடம் ஒரு கேள்வியை முன்வைத்தான்: "உமது பக்தித் தொண்டில் ஈடுபட்டிருப்பவர், அருவ பிரம்மனை அணுகுவோர்—இருவரில் யார் பக்குவமானவர்?"

ஆன்மீகவாதிகளைப் பொதுவாக இரு பிரிவினராகப் பிரிக்கலாம்: பரம் பொருளின் உருவத்தை வழிபடுபவர்கள், உருவமற்ற பரம்பொருளை (அருவ பிரம்மனை) வழிபடுபவர்கள். இவர்களில் யார் சிறந்தவர்? எந்தப் பாதை எளிதானது? என்பதே அர்ஜுனனின் கேள்வியாகும். கிருஷ்ணரின் தனிப்பட்ட உருவில் பற்றுதல் கொண்டுள்ள அர்ஜுனன், தனது நிலையை உறுதி செய்துகொள்வதற்காகவும் இக்கேள்வியை எழுப்புகிறான்.

## அருவவாதத்தைக் காட்டிலும் பக்தியே உயர்ந்தது

கிருஷ்ணரின் தனிப்பட்ட உருவின் மீது மனதை நிலைநிறுத்தி, திவ்யமான நம்பிக்கையுடன் அவரை வழிபடுபவர்களே மிகவும் பக்குவமானவர்கள் என்று உடனடியாக கிருஷ்ணர் பதிலளித்தார். அத்தகைய பக்தனுக்கு ஜடச் செயல்கள் ஏதும் கிடையாது. அவன் சதா சர்வ காலமும் கிருஷ்ணரின் தொண்டில் ஈடுபட்டுள்ளான்; சில நேரங்களில் ஜபம் செய்கிறான், சில நேரங்களில் கிருஷ்ணரைப் பற்றிய நூல்களைப் படிக்கவோ கேட்கவோ செய்கிறான், சில நேரங்களில் பிரசாதம் சமைக்கின்றான், சில நேரங்களில் கிருஷ்ணருக்காக ஏதேனும் வாங்குவதற்குச் சந்தைக்குச் செல்கிறான், சில நேரங்களில் கோவிலைத் தூய்மை செய்கிறான், பாத்திரங்களைக் கழுவுகிறான்—இவ்வாறாக அவன் எதைச் செய்தாலும் சரி, தனது செயல்களை கிருஷ்ணருக்கென அர்ப்பணிக்காமல் நொடிப் பொழுதையும் அவன் கழிப்பதில்லை.



பக்தித் தொண்டில் ஈடுபடுபவனை ஸம்ஸாரக் கடலிலிருந்து பகவான் ஸ்வயம் அவரே விடுவிக்கின்றார்.

ஆனால், தோற்றமற்ற, சிந்தனைக்கு எட்டாத பரம்பொருளின் அருவத் தன்மையை வழிபடுபவர்கள், பல்வேறு புலன்களைக் கட்டுப்படுத்தி, எல்லாரிடமும் சம நோக்குடன் பழகி, அனைவருக்கும் நன்மை தரும் செயல்களில் ஈடுபட்டு, பல்வேறு கஷ்டங்களுக்குப் பின்னரே இறுதியில் கிருஷ்ணரை அடைய முடியும். உண்மையில், கிருஷ்ணரின் உடலிலிருந்து தோன்றும் பிரம்மஜோதியை அடைய முடியும். இருப்பினும், அருவ பிரம்மனின் மீது பற்றுதல் கொண்டுள்ளவர்களின் வளர்ச்சி மிகவும் கடினமானது என்று கிருஷ்ணர் தெளிவுபடுத்துகிறார். முழுமுதற் கடவுளின் நேரடித் தொண்டில் ஈடுபடும் பக்தி யோக வழிமுறை அனைவருக்கும் எளிதான பாதையாகும். பக்தன் பகவானை நேரடியாகவும் உடனடியாகவும் அணுகுகிறான், அதில் அவனுக்கு எந்தவித சிரமமும் இல்லை. ஆனால் அருவத் தன்மையைப் பின்பற்றுபவர்களின் வழி மிகவும் சிரமமானதாகும். (அடுத்த பக்கத்தில் இருக்கும் பட்டியல், அருவ பிரம்மனை வழிபடுவதற்கும் கிருஷ்ணரை நேரடியாக வழிபடுவதற்கும் இடையிலுள்ள வேறுபாட்டினைத் தெளிவுபடுத்தும்).

எல்லா செயல்களையும் கிருஷ்ணருக்காகத் துறந்து, பிறழாமல் கிருஷ்ணரின் மீது பக்தி செலுத்தி, பூரணமாக கிருஷ்ணரை வழிபடுபவர்களை பிறப்பு இறப்பு என்னும் கடலிலிருந்து அவரே உடனடியாகக் காப்பாற்றுகிறார். அதற்கான உத்திரவாதத்தை அவரே வழங்குகிறார். தனது சொந்த பலத்தினால் முயற்சி செய்யும் அருவவாதிக்கு கிருஷ்ணர் நேரடியாக உதவி செய்வதில்லை, ஆனால் அவரிடம் சரணடையும் பக்தனைக் கரையேற்றும் பொறுப்பை அவரே ஏற்றுக்கொள்கிறார். ஒரு பெருங்கடலில் வீழ்ந்து தத்தளிப்பவன், எவ்வளவுதான் மிகச்சிறந்த நீச்சல் வீரனாக இருந்தாலும், தனது சுய வலிமையில் நீந்தி கரைசேருதல் என்பது இயலாத காரியம். யாரேனும் அங்கு வந்து அவனை நீரிலிருந்து தூக்கினால், உடனடியாக அவன் காப்பாற்றப்படுவான். அதுபோல, பகவான் தனது பக்தர்களைப் பிறவிக் கடலிலிருந்து நேரடியாக விடுவிக்கின்றார். எனவே, தம்மைத் தாமே பாதுகாப்பதற்கான வீண் முயற்சியில் ஈடுபடாமல், ஒவ்வொருவரும் கிருஷ்ணரிடம் தஞ்சமடைய வேண்டும். அதுவே வாழ்வின் உன்னதமான பக்குவநிலை.

## படிப்படியான நிலைகள்

அவ்வாறு மனதில் கிருஷ்ணரை நிறுத்தி, முழு அறிவையும் கிருஷ்ணரில் ஈடுபடுத்தினால், கிருஷ்ண பக்தன் எப்போதும்

கிருஷ்ணரிலேயே வாழ முடியும். அத்தகைய உயர்ந்த நிலையைப் பின்பற்ற முடியாதவன், பக்தி யோகத்தின் ஒழுக்க நெறிகளைப் பின்பற்றலாம். அத்தகைய பயிற்சி ஸாதன பக்தி எனப்படும். ஸாதன பக்தியைப் பின்பற்றுபவன் திறமை வாய்ந்த ஆன்மீக குருவின் வழிகாட்டுதலின்கீழ் சில விதிகளைப் பின்பற்ற வேண்டும். அதிகாலையில் எழுதல், குளித்துவிட்டு கோவிலுக்குச் செல்லுதல், பிரார்த்தனை செய்தல், ஹரே கிருஷ்ண மஹா மந்திரத்தைக் குறிப்பிட்ட அளவு ஜபம் செய்தல், விக்ரஹத்திற்கு அலங்காரம் செய்தல், விக்ரஹத்திற்காகச் சமைத்தல், பிரசாதம் ஏற்றல் போன்ற பல்வேறு சட்டதிட்டங்கள் உள்ளன. இவையனைத்திற்கும் மேலாக, தூய பக்தர்களிடமிருந்து பகவத் கீதை, பாகவதம் போன்ற சாஸ்திரங்களைக் கேட்க வேண்டும். அதன் மூலமாக ஒருவன் படிப்படியாக உயர்வு பெற்று எப்போதும் கிருஷ்ணரை நினைக்கும் நிலையை அடைய முடியும்.

பக்தி யோகத்தின் விதிகளை ஒருவனால் பயிற்சி செய்ய முடியாவிடில், கிருஷ்ணருக்காக மட்டும் வேலை செய்வதற்கு முயற்சிக்க வேண்டும். இத்தகைய நிலையில் இருப்பவன், கிருஷ்ண பக்தியின் செயல்களுக்கு உதவி செய்ய முயற்சி செய்யலாம்; அவ்வாறு செயல்படுபவனும் படிப்படியாக பக்குவநிலையை அடைய முடியும். எந்தவொரு முயற்சிக்கும் சற்று நிலம், பணம், நிர்வாகம் மற்றும் தொழிலாளர்கள் அவசியம் என்பதால், கிருஷ்ணருடைய தொண்டிற்கும் இவை தேவைப்படுகின்றன. ஜடவுலகில் புலனுகர்ச்சிக்காக செய்யும் செயல்களை கிருஷ்ணரின் திருப்திக்காக செய்தால், அவை ஆன்மீகச் செயல்களாகிவிடும். ஒருவனிடம் போதுமான பணம் இருந்தால், அவன் கிருஷ்ண உணர்வைப் பரப்புவதற்கான அலுவலகத்தையோ கோவிலையோ கட்டுவதில் உதவி செய்யலாம், அல்லது புத்தகங்களை வெளியிடுவதற்கு உதவலாம். இவ்வாறாக, ஸாதன பக்தியைப் பயிற்சி செய்ய இயலாதவன், தனது வருமானத்தில் ஒரு சிறு பங்கையாவது கிருஷ்ண உணர்வின் பிரச்சாரத்திற்காகத் தியாகம் செய்யலாம்.

இவ்வாறு கிருஷ்ணருக்காக உழைக்க இயலாதவன், தனது உழைப்பின் பலன்களை ஏதேனும் நற்காரியங்களுக்காக தியாகம் செய்ய வேண்டும். இதனடிப்படையில், சமூகத் தொண்டு, குலத் தொண்டு, தேசத் தொண்டு என்று ஒருவன் ஈடுபடலாம். அதனையும் ஒருவனால் பின்பற்ற முடியாவிடில் ஞானத்தை வளர்ப்பதில் ஈடுபடலாம். ஞானத்தைவிட தியானம் சிறந்தது. இருப்பினும், முன்னரே கூறியபடி இவை எல்லாவற்றையும்விட கிருஷ்ணரை எப்போதும் மனதில் நினைத்துக் கொண்டிருக்கும் பக்தனே உயர்ந்தவன்.

| | அருவவாதப் பாதை | உருவத்தை வழிபடும் பக்திப் பாதை |
|---|---|---|
| 1 | உருவமற்ற நிலையின் மீது தியானம்—மிகவும் கடினம் | விக்ரஹத்தின் மீது தியானம்—எளிமையானது |
| 2 | புலன்களுக்கு அப்பாற்பட்ட நிலை, புலன்களை பலவந்தமாக கட்டுப்படுத்த வேண்டும் | புலன்களை உபயோகப்படுத்தி பல்வேறு சேவைகளைச் செய்யும் வழிமுறை |
| 3 | பிரம்மனை உபநிஷத்துகளைக் கொண்டு அறிய வேண்டும் (சமஸ்கிருதம் மூலமாக) | கிருஷ்ணரை பக்தித் தொண்டின் மூலம் அடைதல் (மொழி தடையல்ல) |
| 4 | உறவுகள் இல்லாததால் துயரங்கள் அதிகம் | துயரங்கள் அனைத்தும் கிருஷ்ணரின் உறவினால் எளிமையாகி விடுகின்றன. |
| 5 | சுய முயற்சியை அடிப்படையாகக் கொண்ட முன்னேற்றம் | கிருஷ்ணர் ஸ்வயம் பக்தர்களை முன்னேற்றுகிறார் |
| 6 | நாத்திகனாகிவிடும் அபாயம் உண்டு | எத்தகு அபாயமும் இல்லை |
| 7 | பகவானால் பரிந்துரைக்கப்படவில்லை | பகவானால் பரிந்துரைக்கப்படும் வழிமுறை |
| 8 | சாதாரண செயல்களைத் துறந்தாக வேண்டும் | அத்தகு அவசியம் இல்லை. |

## கிருஷ்ணருக்கு பிரியமான பக்தனின் குணங்கள்

கிருஷ்ணர் பக்தனுக்கு மிகவும் பிரியமானவர், பக்தன் கிருஷ்ணருக்கு மிகவும் பிரியமானவன். பக்தனை கிருஷ்ணருக்கு பிரியமானவனாக மாற்றக்கூடிய சில தன்மைகளை கிருஷ்ணர் இந்த அத்தியாயத்தில் பட்டியலிடுகிறார். பக்தனின் மிக முக்கியமான குணம், கிருஷ்ணரின் மீதான கலப்பற்ற அன்பில் அவருக்குத் தொண்டு செய்வதே. இந்த ஒரு குணம் மற்ற அனைத்து குணத்தையும் பக்தனுக்கு படிப்படியாக வழங்கும்.

பக்தன், பொறாமை இல்லாதவனாக, எல்லா உயிர்களுக்கும் அன்பான நண்பனாக, உரிமை உணர்வின்றி, அஹங்காரமின்றி, சகிப்புத் தன்மையுடன் கட்டுப்பாடுடையவனாக இருந்தால், அத்தகு பக்தன் கிருஷ்ணருக்கு மிகவும் பிரியமானவனாகிறான்.

யாருக்கும் தொல்லை தராமல், தூய்மையாக, நிபுணனாக, கவலைகளின்றி, பலனுக்காக முயற்சி செய்யாத பக்தன், கிருஷ்ணருக்கு பிரியமானவன்.

நண்பர்களையும் எதிரிகளையும் சமமாக பாவித்து, மான அவமானம், வெப்பம் குளிர், புகழ்ச்சி இகழ்ச்சி, ஆகியவற்றில் நடுநிலை வகித்து, இருப்பதை வைத்து திருப்தியுற்று, அறிவில் நிலைபெற்று கிருஷ்ண பக்தியில் ஈடுபட்டுள்ளவன் அவருக்கு மிகவும் பிரியமானவன்.

பக்தித் தொண்டு என்னும் இந்த அழிவற்ற பாதையைப் பின்பற்றி, கிருஷ்ணரை பரம இலக்காக வைத்து நம்பிக்கையுடன் ஈடுபடுபவர்கள், அவருக்கு மிகமிக பிரியமானவர்கள். ஆன்மீக வழிமுறைகளில் பக்தித் தொண்டே சிறந்தது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை என்பதை பகவான் இந்த அத்தியாயத்தில் தெளிவுபடுத்தியுள்ளார்.

திரு. ஸ்ரீ கிரிதாரி தாஸ் அவர்கள், பகவத் தரிசனம் உட்பட பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளையின் தொகுப்பாசிரியராகத் தொண்டாற்றி வருகிறார்.

## பன்னிரண்டாம் அத்தியாயத்தின் நான்கு பகுதிகள்

**(1) அர்ஜுனனின் கேள்வி (12.1)**

பக்தன், அருவவாதி—இருவரில் சிறந்தவர் யார்?

**(2) அருவவாதத்தைக் காட்டிலும் பக்தியே உயர்ந்தது (12.2-7)**

பக்தனே சிறந்தவன் (12.2)

ஞானியும் இறுதியில் என்னை அடைகிறான் (12.3-4)

அருவவாதம் மிகவும் கடினமான பாதை (12.5)

பக்தனுக்கு கிருஷ்ணரே உதவுகிறார் (12.6-7)

**(3) படிப்படியான நிலைகள்**

கிருஷ்ணரில் மனதை பூரணமாக நிலைநிறுத்தியவன் (12.8)

பக்தி யோகத்தின் விதிமுறைகளைக் கடைபிடிப்பவன் (12.9)

தனது பணியினை கிருஷ்ணருக்கு அர்ப்பணிப்பவன் (12.10)

செயலின் விளைவுகளைத் துறப்பவன் (12.11)

ஞானம் அல்லது தியானத்தைப் பயிற்சி செய்பவன் (12.12)

**(4) கிருஷ்ணருக்குப் பிரியமான பக்தனின் குணங்கள்**

தெய்வீக குணங்கள் பக்தனிடம் இருந்தால், அந்த பக்தன் கிருஷ்ணருக்கு மிகவும் பிரியமானவன்.

கிருஷ்ணரைத் தனது பரம இலக்காக வைத்து பக்தித் தொண்டில் ஈடுபடுபவன் அவருக்கு மிகமிக பிரியமானவன்.

# இஸ்கான்—ஓர் அறிமுகம்

ஹரே கிருஷ்ண இயக்கம் என்ற பெயரில் உலகெங்கிலும் பிரபலமாக விளங்கும் அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கம் (International Society for Krishna Consciousness—ISKCON), 1966ஆம் ஆண்டில் தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதரால் தொடங்கப்பட்டது. முறையான குரு சீடப் பரம்பரையில் வந்த ஆச்சாரியரான ஸ்ரீல பிரபுபாதர், பகவத் கீதை, ஸ்ரீமத் பாகவதம் போன்ற வேத சாஸ்திரங்களின் அடிப்படையில் கிருஷ்ண பக்தியினை மக்கள் மத்தியில் எடுத்துரைத்தார்.

அவரது தெளிவான கருத்துகள் அமெரிக்க, ஐரோப்பிய மக்களின் இதயத்தில் உட்புகுந்து பெருத்த மாற்றத்தை ஏற்படுத்தின. அதனைத் தொடர்ந்து, இவ்வியக்கம் மிகவும் குறுகிய காலத்தில் இமாலய வளர்ச்சி பெற்று உலகின் ஆறு கண்டங்களுக்கும் பரவியது. ஜாதி, மதம், இனம், மொழி, அந்தஸ்து, கல்வியறிவு போன்ற எந்த பேதங்களும் இன்றி மனித குலத்தின் மேன்மைக்காக ஆன்மீக ஞானத்தைப் பரப்பி வரும் இவ்வியக்கம், தற்போது நூற்றுக்கணக்கான நாடுகளிலும் இந்தியாவின் பல்வேறு நகரங்களிலும் உற்சாகத்துடன் செயல்பட்டு வருகின்றது.

### இயக்கத்தின் முக்கிய செயல்பாடுகள்

* ஹரி நாம ஸங்கீர்த்தனம்
* பகவத் கீதை போன்ற சாஸ்திரங்களை விநியோகிப்பதன் மூலம் மக்களுக்கு ஆன்மீக அறிவினைப் புகட்டுதல்
* நவீன காலத்திற்கு உகந்த யோகப் பயிற்சியைக் கற்றுத் தருதல்
* அனைத்து மக்களுக்கும் பிரசாத விநியோகம்
* கல்லூரி மாணவர்களுக்கு ஆன்மீகப் பயிற்சி
* அற்புதமான கோவில்களும் விக்ரஹ வழிபாடும்
* பண்ணை நிலங்கள், பசு பராமரிப்பு
* இல்லங்களில் ஆன்மீக நிகழ்ச்சிகள் .... மற்றும் பல

# ஸ்ரீமத் பாகவதம்

வேத இலக்கியங்கள் என்னும் மரத்தின் பழுத்த பழமாகக் கருதப்படும் ஸ்ரீமத் பாகவதமே வேத ஞானத்தின் பூரணமான அங்கீகரிக்கப்பட்ட சாஸ்திரமாகும். சுமார் ஐயாயிரம் வருடங்களுக்கு முன்பு தொகுக்கப்பட்ட இந்த வரலாற்றுக் காவியம், மாமுனிவரான கிருஷ்ண துவைபாயன வியாசரால் அவர் எழுதிய வேதாந்த சூத்திரத்திற்கு அவரே வழங்கிய விளக்கவுரையாகும். அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியரான தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் அவர்கள் பன்னிரண்டு காண்டங்கள் கொண்ட அந்த மாபெரும் காவியத்திற்கு பதினெட்டு பெரும் புத்தகங்களில் விளக்கமளித்துள்ளார். அப்புத்தகத்தின் முதல் காண்டத்தினை இப்பத்திரிகையின் ஒவ்வொரு வெளியீட்டிலும் தொடர்ந்து பிரசுரித்து வருகிறோம்.

## தெய்வீகமும் தெய்வீகத் தொண்டும்

### முதல் காண்டம், அத்தியாயம் 2, ஸ்லோகம் 21

*பித்யதே ஹ்ருதய-க்ரந்திஷ் சித்யந்தே ஸர்வ-ஸம்ஷயா:*
*க்ஷீயந்தே சாஸ்ய கர்மாணி த்ருஷ்ட ஏவாத்மனீஷ்வரே*

### மொழிபெயர்ப்பு

இவ்வாறாக இதயத்திலுள்ள முடிச்சு அவிழ்க்கப்பட்டு, எல்லா சந்தேகங்களும் அறுத்தெறியப்படுகின்றன. ஒருவர் ஆத்மாவை எஜமானராகக் காணும்போது, பலன்நோக்குச் செயல்கள் துண்டிக்கப்படுகின்றன.

### பொருளுரை

முழுமுதற் கடவுளைப் பற்றிய விஞ்ஞானபூர்வமான அறிவைப் பெறுவதும் தன்னைக் (ஆத்மாவைக்) காண்பதும் ஒரே சமயத்தில் நிகழ்வனவாகும். உயிர்வாழியினை ஆத்மா என்று அடையாளம் காண்பதில், பல்வேறு தரப்பினர் பல்வேறு மனக் கற்பனைகளுடனும் சந்தேகங்களுடனும் உள்ளனர். பௌதிகவாதிகள் ஆத்மா இருப்பதை நம்புவதில்லை, ஸாங்கியத் தத்துவவாதிகளோ ஆத்மாவிற்குத் தனித்தன்மை இல்லை என்றும் ஒட்டுமொத்த ஆத்மா அருவமானது என்றும் நம்புகின்றனர். ஆனால் ஜீவாத்மாவும் பரமாத்மாவும் இரண்டு தனித்தனி அடையாளங்கள், தன்மையில் ஒன்றுபட்டும் அளவில் வேறுபட்டும் உள்ளனர் என்று ஆன்மீகவாதிகள் உறுதிப்படுத்துகின்றனர். எத்தனையோ கற்பனைக்கொள்கைகள் உள்ளபோதிலும், பக்தி யோக வழிமுறையில் கிருஷ்ணரை உள்ளபடி உணர்ந்தால், இக்கற்பனைகள் எல்லாம் உடனடியாக அகற்றப்பட்டுவிடுகின்றன. ஸ்ரீ கிருஷ்ணர் சூரியனைப் போன்றவர், பரம்பொருளைப் பற்றிய பௌதிகக் கற்பனைகள் இருண்ட நள்ளிரவைப் போன்றவை. ஒருவரின் இதயத்தினுள் கிருஷ்ணர் என்னும் சூரியன் உதயமானதும், பரம்பொருளையும் உயிர்வாழிகளையும் பற்றிய லௌகீகக் கற்பனைகளின் இருள் உடனடியாக அகற்றப்படுகின்றது. சூரியன் இருக்கும் இடத்தில் இருள் இருக்க முடியாது; மேலும், அறியாமையின் அடர்ந்த இருளுக்குள் மறைந்துள்ள உண்மைகள், ஒவ்வொருவரின் இதயத்திலும் பரமாத்மாவாக உள்ள ஸ்ரீ கிருஷ்ணரின் கருணையால் தெளிவாக புலப்படுகின்றன.

தமது தூய பக்தர்களுக்கு பிரத்யேகமான ஆதரவைக் காட்டுவதற்காக, அவர்களது இதயத்தினுள் தூய அறிவொளியை ஏற்றி, அடர்ந்த இருளைப் போலுள்ள எல்லா சந்தேகங்களையும் தாமே அகற்றுவதாக பகவத் கீதையில் (10.11) கிருஷ்ணர் கூறுகிறார். தமது பக்தனின் இதயத்தில் ஞான தீபத்தை ஏற்றும் பொறுப்பை தாமே ஏற்றுக்கொள்வதால், தெய்வீக அன்புடன் அவரது தொண்டில் ஈடுபட்டுள்ள பக்தன் நிச்சயமாக இருளில் இருக்க முடியாது. அவன் பரம்பொருளையும் பரம்பொருளைச் சார்ந்த இதர உண்மைகள் எல்லாவற்றையும் அறிந்துகொள்கிறான். பக்தன் இருளில் இருப்பது சாத்தியமற்ற ஒன்று, அவன் முழுமுதற் கடவுளிடமிருந்து ஞான ஒளியைப் பெறுவதால், அவனுடைய அறிவு நிச்சயம் பக்குவமானதாகும். ஆனால் எல்லைக்குட்பட்ட தங்களது சொந்த சக்தியின் மூலம் பரம்பொருளின் மீது கற்பனை செய்பவர்களுக்கு இது பொருந்தாது. அங்கீகாரம் பெற்ற நபரிடமிருந்து பணிவுடன் செவிகொடுப்பவருக்காக இறங்கிவரும் பக்குவமான அறிவு *பரம்பரா* என்று அழைக்கப்படுகிறது, செவிகொடுப்பவர் தொண்டு செய்பவராகவும் சரணடைந்தவராகவும் இருத்தல் அவசியம். பரமனின் அதிகாரத் தன்மையை எதிர்த்து, அதே சமயத்தில் அவரை அறிய முயல்வது இயலாத காரியமாகும். மாயா சக்தியின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டதும் பரமனிலிருந்து பிரிந்ததுமான ஓர் அற்பமான பொறி பரமனை எதிர்க்கும்போது, அச்சிறிய பொறியிடம் தன்னை வெளிப்படுத்தாமல் இருக்கும் உரிமை பரமனுக்கு உண்டு. பக்தர்கள் பணிவானவர்கள் என்பதால், தெய்வீக அறிவானது முழுமுதற் கடவுளிடமிருந்து பிரம்மாவிற்கும், அவரிடமிருந்து அவரது குமாரர்களுக்கும் இதர சீடர்களுக்கும் கொடுக்கப்பட்டு வழிவழியாக இறங்கி வருகின்றது. இப்பரம்பரை முறை தொடர்வதற்கு அந்த பக்தர்களின் இதயங்களில் வீற்றிருக்கும் பரமாத்மா உதவி செய்கிறார். இதுவே தெய்வீக அறிவைப் பெறுவதற்கான பக்குவமான வழியாகும்.

இந்த ஞானம், ஆத்மாவையும் ஜடத்தையும் பக்தன் பிரித்தறிவதற்கு பக்குவமாக உதவுகின்றது. ஏனெனில் ஆத்மாவிற்கும் ஜடத்திற்குமான முடிச்சினை (பிணைப்பினை) அவிழ்ப்பவர் பகவானே. அஹங்காரம் என்று அழைக்கப்படும்

இந்த முடிச்சு, ஓர் உயிர்வாழி தன்னை ஜடத்துடன் தவறான முறையில் அடையாளப்படுத்திக்கொள்வதற்கு காரணமாக அமைகிறது. எனவே, இந்த முடிச்சு அவிழ்க்கப்பட்டதும் எல்லா சந்தேகத் திரைகளும் உடனே விலக்கப்படுகின்றன. ஒருவன் தனது எஜமானரைக் கண்டு, அவரது தெய்வீகமான அன்புத் தொண்டில் தன்னை முழுமையாக ஈடுபடுத்துகிறான். அதன் மூலம் பலன்நோக்குச் செயல்களின் பிணைப்பினை முற்றிலும் நீக்கி விடுகிறான். பௌதிக வாழ்விலுள்ள ஓர் உயிர்வாழி தனது சொந்த கர்மங்களை உருவாக்கி, அதன் நல்ல தீய விளைவுகளைப் பிறவிதோறும் அனுபவிக்கின்றான். ஆனால் பகவானின் அன்புத் தொண்டில் அவன் தன்னை ஈடுபடுத்தும்போது, கர்மத் தொடரிலிருந்து உடனடியாக விடுபடுகின்றான். இதன் பின்னர் அவனது செயல்கள் எவ்வித விளைவுகளையும் உண்டாக்குவதில்லை.

## ஸ்லோகம் 22

அதோ வை கவயோ நித்யம் பக்திம் பரமயா முதா
வாஸுதேவே பகவதி குர்வந்த்யாத்ம-ப்ரஸாதனீம்

## மொழிபெயர்ப்பு

எனவே, கற்பனைக்கெட்டாத காலம்தொட்டு எல்லா ஆன்மீகிகளும் பரம புருஷ பகவானாகிய ஸ்ரீ கிருஷ்ணருக்கு பக்தித் தொண்டாற்றி வந்துள்ளனர் என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில், அத்தகைய பக்தித் தொண்டு ஆத்மாவை உற்சாகப்படுத்தக் கூடியதாகும்.

## பொருளுரை

பரம புருஷ பகவான் ஸ்ரீ கிருஷ்ணருக்குச் செய்யும் பக்தித் தொண்டின் சிறப்பு இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. பகவான் ஸ்ரீ கிருஷ்ணரே முழுமுதற் கடவுளின் ஸ்வயம்-ரூபமாவார். மேலும், ஸ்ரீ பலதேவரிலிருந்து தொடங்கி, ஸங்கர்ஷணர், வாஸுதேவர், அனிருத்தர், பிரத்யும்னர் மற்றும் நாராயணர் உட்பட புருஷ அவதாரங்கள், குண அவதாரங்கள், லீலா அவதாரங்கள், யுக அவதாரங்கள் என்று பரம புருஷ பகவானின் பல்லாயிரக்கணக்கான தோற்றங்கள் அனைத்தும், பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் விரிவுகளும் அம்சங்களுமே. ஜீவன்கள் பரம புருஷரிலிருந்து வேறுபட்ட அம்சங்களாகும். எனவே, பகவான் ஸ்ரீ கிருஷ்ணரே பரமனின் மூல வடிவமாவார்; மேலும், அவரே தெய்வீகத்தின் இறுதிச் சொல்லாகவும் இருக்கிறார். இதனால், அவரின் நித்திய லீலைகளில் பங்கேற்கும் சிறந்த ஆன்மீகிகளுக்கு அவர் மிகவும் வசீகரமானவராக உள்ளார். ஸ்ரீ கிருஷ்ணர் மற்றும் பலதேவரைத் தவிர்த்து, பரம புருஷரின் வேறு எந்த ரூபத்திலும் நெருங்கிய தனிப்பட்ட உறவிற்கான வசதிகள் கிட்டுவதில்லை—இதனை விரஜபூமியில் பகவான் நிகழ்த்திய தெய்வீக லீலைகளில் காணலாம். குறைமதி கொண்ட சிலர் வாதிடுவதுபோல், பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் தெய்வீக லீலைகள் புதிதாக ஏற்கப்பட்டவை அல்ல; அவரது லீலைகள் நித்தியமானவை. இருபத்து நான்கு மணி நேரத்திற்கு ஒருமுறை கீழ்த்திசையின் அடிவானில் சூரியன் உதயமாவதைப் போலவே, பிரம்மதேவரின் பகலில் ஒருமுறை உரிய காலத்தில் பகவானின் லீலைகள் தோன்றுகின்றன. (தொடரும்)

---

## கௌடீய வைஷ்ணவ நாள்காட்டி

**(டிசம்பர் 1, 2011 முதல் ஜனவரி 15, 2012 வரை)**

### டிசம்பர்

6, செவ்வாய், மோக்ஷத ஏகாதசி,
மறுநாள் விரதம் முடிக்கும் நேரம் 06:20–10:11
ஸ்ரீமத் பகவத் கீதை உபதேசிக்கப்பட்ட நாள்

14, புதன், ஸ்ரீல பக்திசித்தாந்த சரஸ்வதி தாகூர் மறைவு நாள்,
மதியம் வரை விரதம்

21, புதன், சபல ஏகாதசி,
மறுநாள் விரதம் முடிக்கும் நேரம் 06:28–07:26

25, ஞாயிறு, ஸ்ரீ லோசன தாஸ தாகூர் தோன்றிய நாள்

27, செவ்வாய், ஸ்ரீல ஜீவ கோஸ்வாமி மறைவு நாள்

### ஜனவரி

5, வியாழன், புத்ரத ஏகாதசி,
மறுநாள் விரதம் முடிக்கும் நேரம் 06:35–10:25

14, சனி, ஸ்ரீ ராமசந்திர கவிராஜர் மறைவு நாள்,
ஸ்ரீல கோபால பட்ட கோஸ்வாமி தோன்றிய நாள்

15, ஞாயிறு, ஸ்ரீ ஜயதேவ கோஸ்வாமி மற்றும்
ஸ்ரீ லோசன தாஸ தாகூர் மறைவு நாள்

(தமிழகத்தின் மையப் பகுதியான திருச்சியை அடிப்படையாக வைத்துக் கணக்கிடப்பட்டுள்ளது, ஏகாதசி விரதத்தை முடிப்பதற்கான நேரம் மற்ற இடங்களில் சற்று வேறுபடும்.)

# தமிழகத்திலுள்ள இஸ்கான் கோவில்கள்

**ஒசூர்—**இராமர் கோவில் வளாகம், நேதாஜி ரோடு, ஒசூர் - 635019. ☎ (04344) 226222. மின்னஞ்சல்: iskcon_hosur@rediffmail.com

**கும்பகோணம்—**56/49, சௌராஷ்டிரா பெரிய தெரு, கும்பகோணம் - 612001. ☎ 99949 49108. மின்னஞ்சல்: vanamali.gopal.jps@pamho.net

**கோயமுத்தூர்—**ஸ்ரீ ஜகந்நாதர் கோவில், ஹரே கிருஷ்ண நிலம், 100 அடி நியூ ஸ்கீம் ரோடு, CIT கல்லூரி எதிர்புறம், கோயமுத்தூர் - 641014. ☎ (0422) 2574508, 2574812/13. மின்னஞ்சல்: bhakti.vinoda.swami@pamho.net. www.iskcon-coimbatore.org.

**சென்னை—**ஹரே கிருஷ்ண நிலம், பக்திவேதாந்த ஸ்வாமி சாலை, கிழக்குக் கடற்கரைச் சாலை, சோழிங்கநல்லூர் அஞ்சல், அக்கரை, சென்னை - 600119. ☎ (044) 24530920/21/22/23, 24343266, 32911472 மின்னஞ்சல்: iskconchennai@gmail.com. www.iskconchennai.com.

அலுவலக முகவரி: புது எண் 23, முதல் மெயின் ரோடு, கே.பி. நகர், அடையார், சென்னை - 600020. ☎ (044) 24456199. மின்னஞ்சல்: iskconoffice@gmail.com

**சேலம்—**ஹரே கிருஷ்ண நிலம், கருப்பூர், சேலம் - 636 012. ☎ (0427) 2001686, 2345545, 94421 53427. மின்னஞ்சல்: iskcon.salem@pamho.net. www.iskconsalem.com.

**திருநெல்வேலி—**10B, திருவனந்தபுரம் ரோடு, வண்ணாரப் பேட்டை ரவுண்டானா அருகில், திருநெல்வேலி - 627002. ☎ (0462) 2501640. மின்னஞ்சல்: iskcon.tirunelveli@pamho.net.

**நாகர்கோயில்—**418, KP ரோடு, நாகர்கோயில் - 629002. ☎ 98946 00108. மின்னஞ்சல்: iskcon.kanyakumari@gmail.com

**மதுரை—**12/37. மணிநகரம் மெயின் ரோடு, மதுரை - 625001. ☎ (0452) 2346472. மின்னஞ்சல்: iskcon.madurai@pamho.net

**வேலூர்—**10/12, 10வது கிழக்குக் குறுக்குத் தெரு, காந்திநகர், வேலூர் - 632006. ☎ (0416) 2241654, 94429 53417. மின்னஞ்சல்: akincan_bvks97@rediffmail.com

**ஸ்ரீரங்கம், திருச்சி—**ஹரே கிருஷ்ண நிலம், 107, அம்மா மண்டபம் சாலை, ஸ்ரீரங்கம் - 620006. ☎ (0431) 2433945.

---

**பாண்டிச்சேரி—**41, 8வது குறுக்குச் சாலை, முதல் தளம், ரெயின்போ நகர், பாண்டிச்சேரி - 605011. ☎ 94434 68923. மின்னஞ்சல்: sarvananda2003@yahoo.com

---

## சிறிய (நாமஹட்டா) மையங்கள்

**காவேரிப்பட்டினம்—**111/252, பன்னீர்செல்வம் தெரு, காவேரிப்பட்டினம். ☎ 89257 85310, 95434 98445.

**கிருஷ்ணகிரி—**2/53A, இரண்டாவது குருக்குத் தெரு, கோ-ஆப்பரேடிவ் காலணி, கிருஷ்ணகிரி. ☎ 8925383341.

**தேன்கனிக்கோட்டை—**கிருஷ்ண பலராமர் ஆலயம், ஹரே கிருஷ்ண ரோடு, அன்செட்டி மெயின் ரோடு, தேன்கனிக்கோட்டை.

**நாமக்கல்—**இஸ்கான் நாமஹட்டா மையம், ஸ்ரீ செல்வம் பிளாசா மாடியில், நரசிம்மர் கோவில் எதிரில், கோட்டை, நாமக்கல் - 637001. ☎ 94421 53427, 97885 84802.

**பெரம்பூர், சென்னை—**7C, வாசன் தெரு, பெரம்பூர், சென்னை - 600011. ☎ 98400 87067. மின்னஞ்சல்: jgd@pamho.net

**நெய்வேலி—**E53, அண்ணா சாலை, பிளாக்-26, நெய்வேலி - 607803. ☎ 98945 30533.

உலகின் இதர பகுதிகளிலுள்ள கோவில்களை அறிய, அருகிலுள்ள இஸ்கான் மையங்களை அணுகலாம், அல்லது www.krsna.com என்ற இணைய தளத்தில் காணலாம்.

---

# இதர சத்சங்க நிகழ்ச்சிகள்

இஸ்கான் கோவில்களிலிருந்து தொலைவிலிருக்கும் அன்பர்களின் நன்மைக்காக, வாராந்திர சத்சங்க நிகழ்ச்சிகள் கீழ்க்கண்ட இடங்களில் நடைபெறுகின்றன.

**கும்பகோணம் பகுதியில்:** எலுமிச்சங்க பாளையம், 94882 06353; குத்தாலம், 99947 46106; மேலச்சூர், 73588 01551.

**கோயமுத்தூர் பகுதியில்:** அவினாசி, 94437 75416; ஈரோடு, 94865 83424; ஊட்டி, 99945 53250; கவுண்டம்பாளையம், 98422 15503; குனியமுத்தூர், 94433 54802; கோவைபுதூர், 94433 54802; சிபிஇ மருத்துவக் கல்லூரி அருகில், 98430 84443; சிங்கநல்லூர், 2574812; செங்கலியப்பன் நகர், 94860 10131; சேரன் மாநகர், 94860 10131; சௌரிபாளையம், 98422 52308; டிவிஸ் நகர், 90255 38093; டெக்ஸ்டூல் (சதி ரோடு), 2574812; திருமுருகன் பூண்டி, 93632 03564; நீலிகோணம் பாளையம், 96007 81299; பீளமேடு, கல்லூரி நகர், 93677 30344; பீளமேடு, பாலன் நகர், 2571266; ராம் நகர், 99946 23608; விசியல் தெரு, 98940 16108.

**சென்னை பகுதியில்:** அசோக் நகர், 94452 12281; அண்ணா நகர் மேற்கு, 93806 66794; ஆவடி, 98406 84856; கீழ்கட்டளை, 94456 74080; கே.கே.நகர், 94440 63643; தாம்பரம் மேற்கு, 98407 97062; தியாகராய நகர், 98402 02599; போரூர், 92821 53655; மறைமலை நகர், 98840 81593; முகப்பேர் கிழக்கு, 91761 23336; மேற்கு மாம்பலம், 98400 27800; வேளச்சேரி, 22432510.

**சேலம் பகுதியில்:** பெரமனூர் ரோடு, 97873 88360; வலசையூர், 98654 26916.

**ஸ்ரீரங்கம்/ திருச்சி பகுதியில்:** கே.கே.நகர், 90031 45469; நொச்சியம், 0431 2562813; பெரியகடை வீதி, 98438 97546; பெல் (BHEL) குடியிருப்பு, 94425 21283; மண்ணச்சநல்லூர், 94427 77481; லால்குடி, 98424 72847.



# பகவத் தரிசனம்

பகவத் தரிசனம் படியுங்கள்! பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் தரிசனத்தை அடையுங்கள்!



அரசியல், சினிமா, விளையாட்டு என்று எத்தனை நாள்கள் படித்துக் கொண்டிருப்பீர்? முறையான குரு சீடப் பரம்பரையில் பெறப்பட்ட ஆன்மீகச் செய்திகள் தங்கள் வீட்டின் கதவுகளைத் தட்ட வேண்டாமா? பகவத் தரிசனத்தின் சந்தாதாரராக மாறுங்கள்.

* உலகப் பிரச்சனைகளுக்குத் தீர்வு
* ஆழ்ந்த தத்துவக் கட்டுரைகள்
* ஆன்மீக ஆனந்தம்
* நாட்டின் நிகழ்வுகளுக்கான ஆன்மீகப் பார்வை
* கண்களைக் கவரும் அழகிய படங்கள்
* இன்றைய உலகத்திற்கு உகந்த ஆன்மீக வழிகாட்டி
* எளிய தமிழில்...






## தங்கள் சந்தாவை புதுப்பியுங்கள்

தங்களது முகவரியின் வலதுபுறத்தில் சந்தா முடிவுறும் மாதம் கொடுக்கப்பட்டுள்ளது. அதை கவனித்து தங்கள் சந்தா முடிவுறுவதற்கு முன்பு, அதனைப் புதுப்பித்து ஆன்மீக வாழ்விற்கான இணையற்ற வழிகாட்டியினை தொடர்ந்து பெறும்படி கேட்டுக் கொள்கிறோம்.


**பகவத் தரிசனம்,**

**இஸ்கான், 7C, வாசன் தெரு, பெரம்பூர், சென்னை – 600011.**

தொலைபேசி: (044) 25514553, 98948 14553. மின்னஞ்சல்: tamilbtg@gmail.com


☐ ஆம், என்னை பகவத் தரிசனத்தின் சந்தாதாரராக இணைத்துக் கொள்ளுங்கள்

பெயர்: ______________________

முகவரி: ______________________

______________________

☐ ஒரு வருடம், ரூ 160

☐ இரண்டு வருடம், ரூ 300

☐ ஐந்து வருடம், ரூ 700

பின்கோடு: ____________ தொலைபேசி எண்கள்: ______________________

மின்னஞ்சல்: ______________

குறிப்பு: வரைவோலைகளும் (DD) At par காசோலைகளும் (cheque) "Bhaktivedanta Book Trust" என்ற பெயரில், சென்னையில் செலுத்தப்படக்கூடியதாக இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்கப்பட மாட்டாது.




# தங்கமயில்

தங்கம் + வைரம் + வெள்ளி + பிளாட்டினம்

தங்கம் வாங்க, தங்கமயிலுக்கு வாங்க

124, நேதாஜி ரோடு, மதுரை. போன்: 0452 2345553

330, 80 அடி ரோடு, அம்பிகா தியேட்டர் எதிரில்
அண்ணாநகர், மதுரை. போன்: 0452 2524553

**இராஜபாளையம்**
613, தென்காசி ரோடு, இராஜபாளையம்.
போன்: 04563 225553

**திண்டுக்கல்**
1, சாலை ரோடு, திண்டுக்கல்.
போன்: 0451 2440553

**காரைக்குடி**
333, செக்காலை ரோடு, காரைக்குடி.
போன்: 04565 400553

**தேனி**
1244, பெரியகுளம் ரோடு, தேனி.
போன்: 04546 251553

**இராமநாதபுரம்**
252, சாலைத்தெரு, இராமநாதபுரம்.
போன்: 04567 225553

**சிவகாசி**
144A, N.R.K.R. ரோடு, சிவகாசி.
போன்: 04562 278553

**தூத்துக்குடி**
351, WGC. ரோடு, தூத்துக்குடி.
போன்: 0461 2337553

**கம்பம்**
53, குமுளி ரோடு, காந்தி சிலை அருகில்.
போன்: 04554 274553

**அருப்புக்கோட்டை**
102, 103 திருச்சுழி ரோடு, அருப்புக்கோட்டை.
போன்: 04566 224553

**தென்காசி**
244/78, ரயில்வே பீடர் ரோடு,
தென்காசி.

**சேலம்**
62-66, பஜார் ரோடு, பழைய சேலம் கட்டே,
கோட்டை மாரியம்மன் கோயில் அருகில், சேலம்.
போன்: 0427 2251553

**பழநி**
4, ஸ்ரீராம காம்பளக்ஸ், திண்டுக்கல் ரோடு,
பஸ் நிலையம் எதிரில், பழநி.
போன்: 04545 245553